கண்ணி

# கன்னி வெடிகள்



‘ஆத்துமப்பிணைப்பு’ என்ற ‘இதயப்பிணைப்பு’

**SOUL-TIES**

Pastor. S.ROMILTON


~~கண்ணீர்~~
கண்ணீர் பெழுகள்
Pastor. S.ROMILTON



புத்தகங்கள் கிடைக்குமிடம்

அடையாள அக்கினி

246-B, POCKET-C, MAYUR VIHAR,
PHASE-2, DELHI-110 091.
MOB: 98106 46981 / 99901 03010

# உள்ளே

## Chapter-1

### கன்னி வெடிகள்

1. பரிசுத்தமில்லா பாசப்பிணைப்பு ஆத்துமப் பிணைப்பு அல்லது மனங்களின் பிணைப்பு என்றால் என்ன? ---------- 01

2. ஆத்துமப் பிணைப்பு அல்லது மனங்களின் பிணைப்பின் மனநோய் அறிகுறிகள் ---------- 07

3. ஆத்துமப் பிணைப்பு அல்லது இதயப் பிணைப்பின் RED LIGHT அறிகுறிகள் ---------- 10

4. ஆத்துமப் பிணைப்பு அல்லது மனங்களின் பிணைப்பு உருவாகும் விதங்கள் ---------- 14

5. ஆத்துமப் பிணைப்பும் அன்றாட வாழ்க்கையும் ---------- 22

6. ஆத்துமப் பிணைப்பும் அன்பும் ---------- 24

7. ஆத்துமப் பிணைப்பும் உங்கள் ஊழியமும் ---------- 26

## Chapter-2

1. 'ஆத்துமப் பிணைப்பு' 'ஒரே ராத்திரி' சமாச்சாரமல்ல இது.. ---------- 30

2. ஒழுக்கக் குலைச்சல் -ஒரு சங்கிலித்தொடர் நிகழ்வு- 33

3. நினைவாலே அணைப்பேன் ---------- 36

4. கனவுத் தொழிற்சாலை ---------- 40

5. WINDOWS ---------- 43

6. தொடு தூரம் ---------- 47

## Chapter - 3


*1. இம்மட்டும் வா! மிஞ்சி வராதே!* ---------- 49

2. **Setting Sexual Boundaries** ---------- 56


## Chapter - 4


*1. வானத்தில் பறக்கலாம் வா !* ---------- 59



*Our Special & Sincere Thanks To :*

**REV. BENITA FRANCIS**
**MS. LOIS MOWDAY RABEY &**
**BRO. VINCENT SELVAKUMAR**



# என்னுரை



கர்த்தருக்குள் பிரியமானவர்களே,

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பாக வட இந்திய சபை ஒன்றில் நடந்த சம்பவம் ஒன்றை மிகுந்த வேதனையோடு இங்கே பகிர்கிறேன்..

ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவி.. சண்டே ஸ்கூல் மற்றும் டீன் ஏஜர்ஸ் மீட்டிங்கில் ஒழுங்காக வருபவள். இயேசுவை ஏற்றுக் கொண்டவள்..

ஆனாலும் தன்னைப் போன்ற விசுவாசத்தில் இல்லாத Boy friend ஒருவனுடன் நெருக்கமான உறவு. ஒரு கட்டத்தில் எல்லா எல்லையும் மீறி அவனோடு எல்லாவிதத்திலும் ஐக்கியமாய் இருந்துவிட்டு கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகளிலும் முன்னணியில் மேடையில் பங்கு கொள்கிறாள். அவளுடைய காரியங்கள் வெளியே தெரிய வந்து விசாரிக்கப்பட்ட போது, எந்தக் குற்ற உணர்வுமே இல்லாமல் 'இதிலென்ன இருக்கிறது' இதெல்லாம் பல முறை எங்களுக்குள் நடப்பதுதான் என்று தேவ பயமோ வெட்கமோ இன்றி அவளிடமிருந்து பதில் வருகிறது. கடைசியில் சில நாட்களுக்குப் பிறகு செய்தி வருகிறது, அவள் யாருடன் ரிலேஷன்ஷிப்பில் இருந்தாளோ அவன் கையினாலேயே அவள் கொல்லப்பட்டுவிட்டாள் என்று..

இந்தச் சம்பவம், ஆங்கிலத்தில் tip of the iceberg என்று சொல்வது போல் வெளியே தெரியாத பல நூறு சம்பவங்களில் ஒன்றே..

உலகப்பிரகாரமான மக்கள் மத்தியில் பரவலாகக் காணப்படும் இந்தக் காரியங்கள் இன்றைய சபையிலும் காணப்படுவது தான் தாங்க இயலாத வேதனை. ஒரு சபையின் போதகனாக, மேய்ப்பனாக, தகப்பனாக 30 வருடங்களுக்கு மேலாக இருந்து வரும் நிலையில், சபைகளில் காணப்படும் இந்த அக்கிரமக் கிரியைகளை, அருவருப்புகளை நாள்தோறும் கண்டு, கேட்டு இருதயத்தில் வாதிக்கப்பட்டு, அன்றாடம் நொந்து அழுது, அதினால் வரும் வேதனையின் வெளிப்பாடே 'கன்னி வெடி' என்ற தலைப்பில் 'ஆத்துமப் பிணைப்பு' என்ற இந்த சப்ஜெக்ட்டை இவ்வளவு அழுத்தமாக எழுதுவதின் நோக்கம்.

உங்களில் சிலர் நினைக்கலாம்.. 'ஆத்துமப் பிணைப்பு' போன்ற 'ஒரு மாதிரியான' சப்ஜெக்டைப் பற்றி இவ்வளவு விரிவாகவும் ஆழமாகவும் வெளிப்படையாகவும் பேசவும் எழுதவும் விவாதிக்கவும் அவசியமா ?' என்று..

இந்த விஷயத்தைக் குறித்து சகோதரி. பெனிட்டா ஃபிரான்சிஸ் ஒரு தனிப் புத்தகமே தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். அதிலுள்ள ஒரு சில பகுதிகளை நாம் இதிலே சேர்த்திருந்தாலும், Lois Mowday Rabey அவர்கள் எழுதியுள்ள 'THE SNARE' என்ற புத்தகத்தின் பெரும்பாலான பகுதிகள் மொழிபெயர்க்கப்பட்டு இதிலே இணைக்கப்பட்டுள்ளது. கூடவே சகோ. வின்சென்ட் செல்வகுமார் அவர்களின் 'வானத்தில் பறக்கலாம் வா' என்னும் கட்டுரையும் இதிலே அடக்கம். இவர்கள் ஒவ்வொருவருக்காகவும் நான் தேவனுக்கு நன்றி செலுத்துவதோடு, இவர்களது ஊழியங்களுக்காக நன்றியுள்ளவனாய், இவர்கள் ஒவ்வொருவருக்கும் எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபிப்பது ஒரு பக்கமிருக்க, புலம்பலின் புத்தகத்தைப் படித்துப் படித்து நமது பிள்ளைகளுக்காகவும், வாலிப மக்களுக்காகவும் ஆராதனை என்ற பெயரில் அழிந்து கொண்டிருக்கும் தலைமுறைக்காகவும் கர்த்தருடைய பாதத்தில் விழுந்து கதற கர்த்தர் உங்களுக்கும் எனக்கும் கிருபை தருவாராக !

மிகுந்த வேதனையுடன் உங்களில் ஒருவனாக..

Pr. **Romilton**

# கண்ணி (கன்னி) வெடிகள்

## நூல் அறிமுகம்

அநேக பிரசங்கங்கள்..
கணக்கற்ற தேவசெய்திகள்..
புத்தகங்களுக்கோ குறைவில்லை..
வெளிப்பாடுகளும் தீர்க்கதரிசனங்களும் ஏராளம்..

இவைகள் எல்லாவற்றிற்குள்ளும் ஒரே ஒரு செய்தி மட்டும் மிஸ்ஸிங்!

அது ஒரு மிக மிக சீரியஸான விஷயம் !
அதிமுக்கியமான செய்தி !
வெகு ஜாக்கிரதையாகவும் துரிதமாகவும் டீல் பண்ணப்பட வேண்டிய காரியம் !
ஆழத்திலும் ஆழமான சத்தியம் !

தாங்கள் அறியாமலேயே,
தாங்களே பின்னிக்கொண்டு அநேகர்
சிக்கிக் கொண்டிருக்கும் ஒரு மாய வலை இது !

'பாவம்' போலக் காணப்படும் பாவம் இது !

வேதம், 'வேண்டாம்' என்று வெறுத்து ஒதுக்கும் காரியங்களில் இதுவும் ஒன்று !

இது ஒரு இனிப்பான ஸ்லோ பாய்ஸன் !
மிக அருமையான வாசனை வீசும் மயக்க மருந்து !
முடிவில் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்தில் தள்ளும் மெர்ஸி கில்லர் !

ஆனால் சபைகளில் இது ஒரு கண்டுகொள்ளப்படாத உண்மை !
அறியப்படாத,
காணப்படாத,
தொடப்படாத ஒரு சப்ஜெக்ட் !

இது தன்னை வெளியில் காட்டிக் கொள்வதே இல்லை..
அவ்வளவு எளிதில் யாரையும் விட்டுவைப்பதுமில்லை..

இந்த மாயக் கயிற்றினால் கட்டப்பட்டு, தங்களையும்,தங்கள் தேவனையும்,
மேன்மையான ஆவிக்குரிய ஜீவியத்தையும்,
மகிமையான  ஊழியத்தையும் இழந்து நடுத்தெருவில் நிற்கும்
மாமனிதர்கள் தான் எத்தனை எத்தனை !

இந்தக் கண்ணிகளில் சிக்கித் தவிக்கும் வாலிபர்களையும் பெரியவர்களையும் எப்படியாவது வெளியே கொண்டு வர இந்தச் செய்தி எந்த வகையிலாவது உதவாதோ என்பதே இப்புத்தகத்தின் நோக்கம்.

ஆகவே அன்பர்கள், ‘இதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை’ என்ற எண்ணத்தோடு அல்லாமல், ’இன்றைக்கு இதில் நான் எச்சரிக்கையோடு இல்லாவிட்டால் இது என்றைக்கானாலும் நம்மில் யாரோ ஒருவரையோ, அல்லது நம்மைச் சார்ந்தவர்களையோ, நமது பிள்ளைகளையோ அல்லது பின் சந்ததியையோ தனக்கு இரையாக்கி விடும் என்ற எச்சரிக்கையோடு வாசிக்கும்படியாகவும், மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும்படியாகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு இந்த சத்தியங்களையும் திருவுளம்பற்றுகிறார் என்பதை மறவோமாக!



# Chapter 01

## பகுதி – 1

## கண்ணி (கன்னி) வெடிகள்

அநேக பிரசங்கங்கள்.. கணக்கற்ற தேவசெய்திகள்.. புத்தகங்களுக்கோ குறைவில்லை.. வெளிப்பாடுகளும் தீர்க்கதரிசனங்களும் ஏராளம்.. இவைகள் எல்லாவற்றிற்குள்ளும் ஒரே ஒரு செய்தி மட்டும் மிஸ்ஸிங் !

அது ஒரு மிக மிக சீரியஸான விஷயம் ! அதிமுக்கியமான செய்தி ! வெகு ஜாக்கிரதையாகவும் துரிதமாகவும் டீல் பண்ணப்பட வேண்டிய காரியம் ! ஆழத்திலும் ஆழமான சத்தியம் !

தாங்கள் அறியாமலேயே, தாங்களே பின்னிக்கொண்டு அநேகர் சிக்கிக் கொண்டிருக்கும் ஒரு மாய வலை இது !

'பாவம்' போலக் காணப்படும் பாவம் இது !

வேதம், 'வேண்டாம்' என்று வெறுத்து ஒதுக்கும் காரியங்களில் இதுவும் ஒன்று ! இது ஒரு இனிப்பான ஸ்லோ பாய்ஸன் ! மிக அருமையான வாசனை வீசும் மயக்க மருந்து ! முடிவில் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்தில் தள்ளும் மெர்ஸி கில்லர் !

ஆனால் சபைகளில் இது ஒரு கண்டுகொள்ளப்படாத உண்மை ! அறியப்படாத, காணப்படாத, தொடப்படாத சப்ஜெக்ட் !

வேதம் இதை, 'மனம் இதமியப்பட்டு' என்றும், 'அவள் ஆசை அவனைப் (அவளை) பற்றியிருக்கும்' என்றும், 'ஆத்துமா பின்னிப் பிணைந்து இசைந்திருந்தது' என்றும், 'மோகம் கொண்டான்' என்றும், 'ஆசை வைத்து ஐக்கியமாயிருந்தான்' என்றும், 'மனம் பற்றுதலாயிருந்தது' எனறும், 'ஜீவனோடு ஜீவன் ஒன்றாய் இணைக்கப்பட்டிருந்தது' என்றும் பல சந்தர்ப்பங்களில் பலரைக் குறித்து பற்பல பெயர்களைக் கொடுத்தாலும், ஆண்டவர் இதை அழைப்பது என்னவோ 'ஆத்துமப் பிணைப்பு' அல்லது 'இதயப் பிணைப்பு' அல்லது 'பாசப் பிணைப்பு' என்றுமே !

ஆங்கிலத்தில் இது '**Ungodly Soul Ties**' என்று அழைக்கப்படுகிறது.

தேவன் தாமே அநேகரைக் கொண்டு அநேக காரியங்கள் செய்ய நினைத்தாலும், அவரே கூட செய்ய முடியாதபடி அவரது கைகளையும் கட்டிப்போடும் வல்லமை கொண்டது இந்த 'ஆத்துமப்பிணைப்பின் கட்டு' ! தொன்றுதொட்டு உலகத்தாரையும் அவிசுவாசிகளையுமே இது கட்டிப் போட்டிருந்தாலும்.. இன்று இதில் அதிகமாய்க் கட்டுண்டு கிடப்பதோ விசுவாசிகளும், போதகர்களும், பிஷப்புகளும், மிஷன் இயக்கத் தலைவர்களும், பெரிய பெரிய ஊழியர்களுமே !

இது தன்னை வெளியில் காட்டிக் கொள்வதே இல்லை..
அவ்வளவு எளிதில் யாரையும் விட்டுவைப்பதுமில்லை..

இந்த மாயக் கயிறுகளால் கட்டப்பட்டு, தங்களையும், தங்கள் தேவனையும், மேன்மையான ஆவிக்குரிய ஜீவியத்தையும், மகிமையான ஊழியத்தையும் இழந்து நடுத்தெருவில் நிற்கும் மாமனிதர்கள் தான் எத்தனை எத்தனை !

இது எழுப்புதலின் மிகப்பெரிய எதிரிகளில் ஒன்று. இதின் தீவிரத்தையும், ஆபத்தையும் எச்சரித்து அறிவிப்பதே இப்பகுதியின் நோக்கம் ! கர்த்தர் நமது கண்களைத் திறப்பாராக !

> "**UNGODLY SOUL TIES**
> **இது தன்னை வெளியில் காட்டிக் கொள்வதே இல்லை.. அவ்வளவு எளிதில் யாரையும் விட்டுவைப்பதுமில்லை..**"

## பரிசுத்தமில்லா பாசப் பிணைப்பு
## Ungodly Soul Ties

**VALENTINE DAY** என்ற காதலர் தினம் !!

உலகமே கொண்டாடும் இந்த நாள், மனம் விரும்பிகள், உயிருக்குயிரானவர்கள், தாங்கள் நேசிக்கிறவர்களுக்காகத் தங்கள் உயிரையும் துச்சமாய் மதிப்பவர்கள், காதல் என்ற சொல்லையும் செயலையும் புனிதமாய்க் கருதுபவர்கள் மற்றும் தங்கள் சுய இச்சைகளுக்காகவும் சுயநலத்துக்காகவுமே பயன்படுத்திக் கொள்ளும் நேரத்துக்கேற்ற பச்சோந்திகள் தங்களுடையதாய்க் கொண்டாடும் தினம்...

ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் நேசிக்கும் நேசத்தை, உள்ளான அன்பை, ஒருவர் பக்கம் மற்றவர் ஈர்க்கப்படும் ஈர்ப்பை தேவன் இயற்கையிலேயே மனித மனங்களிலும், சரீர உட்கூறுகளிலும் வைத்திருந்தாலும், அதைக் கர்த்தருக்குள்ளான பரிசுத்த உறவாய் அவர் படைத்திருந்தாலும், ஆதி முதலே பிசாசு இதைக் கொச்சைப்படுத்தி, தனது வலுமையான ஆயுதமாய்ப் பயன்படுத்தி, மனங்களை மயக்கி, உயிர்களைப் பின்னிப் பிணைத்து மனித வர்க்கத்தையே மாம்ச இச்சைக்குள்ளாக்கி, மரணம் மட்டும் அல்லாது, அதையும் தாண்டி, விலையேறப்பெற்ற உயிர்களை, ஆத்துமாக்களை நரக பாதாளமட்டும் இழுத்துச் சென்று நாசமாக்கிப் போடுகிறான் என்பதே உண்மை !

எத்தனை வாலிபர்கள் ! எத்தனை பிஞ்சு உள்ளங்கள் ! எத்தனை மணமானவர்கள் ! எத்தனை கள்ளத்தொடர்புகள் ! எத்தனை உடைந்த குடும்பங்கள் ! எத்தனை கொலைகள் ! எத்தனை தற்கொலைகள் ! எத்தனை ஆணவக் கொலைகள் ! எத்தனை உயிர்ச்சேதங்கள் !

இவை அனைத்திற்கும் பின்னால்... அன்பு..காதல்.. மனங்களின் இசைவு.. இணைவு.. இதமியம்.. பின்னிய பிணைப்பு..ஏக்கம் ஏங்கல் என்று என்னென்னவோ !!



உலகமே இதற்குள் மூழ்கிப்போயிருந்தாலும் இன்று இந்த இரத்தக்காட்டேரி, சபைக்குள்ளும் தலைவிரித்தாடுவது தான் வேதனையிலும் வேதனை !

முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் அவரையே நேசிக்கச் சொன்ன அவர், தமக்கும் நமக்கும் நடுவே வேறு யாரும் வருவதையோ, அவரைத் தாண்டி, அது யாராகவே இருந்தாலும் அதுவே நமக்கு விக்கிரகமாகி நமது மனம் அந்த உறவின் மேல் லயிப்பதை விரும்பாதவர் மட்டுமல்ல, அதை அடியோடு வெறுத்துத் தள்ளும் ஒரு பரிசுத்த வைராக்கியமுள்ள ஆண்டவர் அவர் !

சபைகளில் ஒரு காலத்தில் இலைமறை காயாக இருந்து வந்த இந்தப் பாவம், இன்று வாலிபர் மத்தியில் மட்டுமல்ல - பெரியவர் சிறியவர், விசுவாசி போதகர் என்ற பாகுபாடே இன்றி ஒருவரையும் விட்டு வைக்காமல் இலச்சையைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது !

இது ஒரு..

ஆண்டவர் வெறுக்கும்
ஆத்துமப்பிணைப்பு !

பரிசுத்தமில்லா
பாசப்பிணைப்பு !

உயிர் கொல்லும்
உயிர்ப்பிணைப்பு !

மனம் கொல்லும்
மனங்களின் பிணைப்பு !

## 'ஆத்துமப்பிணைப்பு' அல்லது 'மனங்களின் பிணைப்பு' என்றால் என்ன ?

விசுவாசிகளோ, உலகத்தாரோ, ஒவ்வொருவர் உள்ளத்திலும் அன்பு, பிரியம், பாசநேசம், பரிதபிப்பு என்ற உணர்ச்சிகரமான இயல்புகளை இயற்கையாகவே தேவன் வைத்திருக்கிறார். இவை எல்லாமே பலவித உறவுகளோடு இணைந்திருப்பவை..

கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள்,சகோதர - சகோதரிகள், இரத்த உறவுகள், நண்பர்கள், ஆசிரியர் - மாணவர், எதிர்பாலாரோடு உள்ள உறவுகள், வளர்ப்பு பிராணிகளிடம் காட்டும் உறவுகள், விசுவாச சகோதர சகோதரிகள்.. போதகர் - விசுவாசிகள்.. என்று பலதரப்பட்ட உறவுகளோடு இந்தப் பிரியமும் பாசமும் கலந்து காணப்படுவது இயல்பு.

தேவன், எப்படிப்பட்ட அன்புக்கும் ஒரு எல்லையை நியமித்திருக்கிறார்.

ஆனால் அந்த எல்லையை மீறி, அது எப்படிப்பட்ட உறவானாலும், எவ்வளவு தான் நியாயமான உறவானாலும் - அந்த உறவில் அளவுக்கு அதிகமான அன்பும் நெருக்கமும், மனதைப் பறிகொடுத்தலும் நடக்கும்போது, அந்த உறவில் மனதோடு மனம் இணைந்துவிடும் போது, அந்த இரு மனங்களும் உள்ளங்களும் இதயங்களும் பின்னிப் பிணைந்து அதின் மூலம் உருவாவதே 'ஆத்துமப் பிணைப்பு' அல்லது 'இதயப் பிணைப்பு அல்லது 'மனங்களின் பிணைப்பு..' என்பதாகும்.

நாம் நமது முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு சிந்தையோடும் முழு பெலத்தோடும் தேவனிடத்தில் அன்புகூர வேண்டும் என்று இயேசு நமக்குக் கட்டளையிடுகிறார்.. நாம் அவர் மேல் கொண்டிருக்கும் அன்பின் ஆழத்தை ஒப்பிடும்போது மற்ற அன்பெல்லாம் வெறுப்பாகத் தெரிய வேண்டுமாம். அத்தனை வலிய அன்பை அவர் நம்மிடம் கேட்கிறார்..

கணவன் மீது மனைவிக்கோ..மனைவி மீது கணவனுக்கோ.. குறிப்பட்ட மகன் அல்லது மகள் மேல் அம்மாவுக்கோ அப்பாவுக்கோ.. மகனுக்கு / மகளுக்கு அப்பா மீதோ அம்மா மீதோ.. அண்ணனுக்குத் தம்பி மீதோ, தங்கைக்கு அண்ணன் மீதோ..அக்காவுக்கு தம்பி மீதோ.. நண்பன் மேல் நண்பனுக்கோ, சிநேகிதி மேல் சிநேகிதிக்கோ.. Boy friend மீது Girl friend க்கோ, காதலி மீது காதலனுக்கோ.. காரியதரிசி மீது தலைவருக்கோ, தலைவர் மீது காரியதரிசிக்கோ.. நடிக நடிகை, விளையாட்டு வீரர்கள் மீது fans க்கோ அரசியல் தலைவர் மீது தொண்டனுக்கோ.. வாலிப பாஸ்டர் மீது விசுவாச சகோதரிக்கோ வல்லமையாய் ஜெபிக்கும் சிஸ்டர் மீது ஜெபக்குழு பிரதருக்கோ.. நன்கு பாடி கீ- போர்டு வாசித்து ஆராதித்து ஊழியம் செய்யும் சகோதரர் மீது பாடல் குழு சகோதரிக்கோ அல்லது தீர்க்கதரிசனம் உரைக்கும் சகோதரி மீது சகோதரருக்கோ.. உடன் ஊழியர் மீது பாஸ்டருக்கோ அவரது மனைவிக்கோ..



**ஆக அது யாராயிருந்தாலும்..**

இந்த அன்பு பாசமாய் மாறி, பாசம் பக்தியாய் மாறி, பக்தி பைத்தியமாய் மாறி நினைவுகளை ஆக்கிரமித்து, அவர்களையே எப்போதும் நினைக்க வைத்து, அவர்களைப் பற்றியே பேசிக் கொண்டிருக்க வைத்து, பித்துப்பிடித்து அலைய வைக்கும் ஒருவகையான 'கட்டு' தான் இந்த ஆத்துமப் பிணைப்பு.. பிடிப்பு..

பிசாசின் மறைவான, மிக வலுவான இந்த ஆயுதமாகிய 'இதயப் பிணைப்பு' நம்மில் பலரை தேவ சித்தம் செய்யாதபடி கட்டிப் போட்டு, தேவ சித்தம் செய்வதைவிட, அடுத்தவரின் அங்கீகாரத்தையே தலை மேல் வைத்து சிருஷ்டி கர்த்தரோடு உள்ள உறவையே முறித்துப்போட்டு விடும்.

நாம் மிகக் கொடியவைகளாகக் கருதும் எல்லாப் பாவங்களையும் விட இந்த ஆத்துமப் பிணைப்புக்களே நமது உறவுகளையும் தேவ அழைப்பையும் சீரழித்து சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கிறது.

Chapter 01

பகுதி – 2

# ‘ஆத்துமப்பிணைப்பு’ அல்லது ‘மனங்களின் பிணைப்பின்’ மனநோய் அறிகுறிகள்

ஆத்துமப் பிணைப்பு அல்லது மனங்களின் பிணைப்பு என்பது ஒரு ஆவிக்குரிய நோய். அந்த வியாதியின் அறிகுறிகளில் சில..

- அதில் சிக்கிக் கொண்டவர்கள்.. மற்றவர்கள் அவர்களைத் திருத்த முயற்சிக்கும்போது, ‘அதெல்லாம் ஒன்றுமில்லை..இதில் என்ன இருக்கிறது..இயற்கை தானே ?’ என்பார்கள்.

  அவர்கள் இல்லையா இவர்கள் இல்லையா ? வேதத்தில் அவன் அப்படி இருந்ததில்லையா இவன் இப்படி இருந்ததில்லையா’ என்று வசனத்தையும் மேற்கோள் காட்டுவார்கள்.

- அதில் சிக்கிக் கொண்டவர்கள்..‘நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது..என் ஆவிக்குரிய வாழ்க்கையே அஸ்தமித்து விடும்.. உன்னை என்னால் மறக்கவும் முடியாது..பிரியவும் முடியாது..என் சந்தோஷமே நீ தான்..’ என்பார்கள்..

- நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்.. அடுத்த நபர் உங்களிடம் நூறு சதவீதம் சந்தோஷமாக இல்லாவிட்டால், உங்களால் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க முடியாது. இருக்கவும் விடாது..

  அது உங்களையும் உங்கள் ஊழியத்தையும் தேவனுக்குப் பிரியமற்றதாக்கி மனுஷராலும் அங்கீகரிக்கப்படாததாக்கிவிடும்..

- நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..ஆண்டவரை விட மனிதனையே பிரியப்படுத்தி அவனுக்கு கீழ்ப்படியவே விரும்புவீர்கள்..

- நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

  நீங்கள் மற்றவரின் கட்டுக்குள் சிக்கிவிட்ட கைதியாகி விடுவீர்கள். நீங்கள் ஆவியில் நடத்தப்படுவதைவிட அந்த நபரின் ஆணைகளுக்கே அடிமையாகி விடுவீர்கள்..

- நீங்கள் இந்த உயிர்ப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

  பரிசுத்த ஆவியைப் பெறுவதும், அவரால் நிரம்பி இருப்பதும், அவரால் நடத்தப்படுவதும் உங்களுக்குக் கடினமாகிவிடும்..

- நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

  நீங்கள் ஆவியில் நடக்காமல் மாம்சத்தில் நடப்பீர்கள். ஆவிக்குரியவைகளை சிந்திக்காமல் மாம்சத்துக்குரியவைகளையே சிந்திப்பீர்கள். இது உங்கள் ஜீவனையும் சமாதானத்தையும் திருடிவிடும்.

- நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

  நீங்கள் அந்த நபரையே விக்கிரகமாக்கி விடுவீர்கள். மீண்டும் எச்சரிக்கிறேன். இது மிகத் தந்திரமாக, உங்களுக்கே தெரியாமல், நடந்துவிடும்.

- நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

  அந்த நபரைக் குறித்து யார் எந்தக் குறை சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள். அல்லது மறுப்பீர்கள். அடுத்தவர் திருத்துவதையோ, உதவுவதையோ எதிர்த்து நிற்கும் குருடர்களாகி விடுவீர்கள். எல்லாரையும் விட அந்த நபரை முழுக்க முழுக்க நம்புவீர்கள். அவரை மற்றவர்களிடமிருந்து பாதுகாப்பதில் மிதமிஞ்சிய வைராக்கியம் காட்டுவீர்கள்.

- நீங்கள் இந்த பாசப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

  பரிசுத்த ஆவியானவரே அந்த நபரைக் குறித்துக் கொடுக்கும் எச்சரிக்கைச் சத்தத்தைக்கூட அமுக்கி விடுவீர்கள். ஆனால் ஒரு நாள் யாரும் மறுக்க முடியாத அடையாளங்களோடு அவரது குற்றங்கள் நிரூபிக்கப்படும்போது, அதிர்ச்சியில் இடிந்து விடுவீர்கள்.

- நீங்கள் உங்கள் பிள்ளைகளோடு ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

  அந்தப் பிள்ளையின் குறையை யார் சுட்டிக் காட்டினாலும் உங்களால் பொறுக்க முடியாது. உங்கள் பிள்ளையின் ஆவிக்குரிய வாழ்வையும் ஒழுக்கத்தையும் சரீரத்தையும் பாதுகாப்பதற்காக உதவி செய்ய வருபவர்களையும் நீங்கள் பகைத்து ஒதுக்கி விடுவீர்கள்.

- நீங்கள் இந்த மனங்களின் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

  உங்களால் சரிவர ஜெபிக்க முடியாது. ‘இப்போ ஜெபம் பண்ணனும் தான்..ஆனால் அதற்கு முன்பு கொஞ்சம் அந்த பிரதருக்கு போன் பண்ணிவிடுகிறேன்.. அந்த சிஸ்டருக்கு ஒரு மெசேஜ் கொடுத்து விடுகிறேன்.. அவங்க எதிர்பார்த்துட்டே இருப்பாங்க.. கர்த்தர் புரிஞ்சுக்குவார்..’ என்று பல சாக்குப்போக்குகளைச் சொல்வீர்கள்.

- நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

  நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் தேவனையும் அவர் ராஜ்யத்தையும் முதலாவது வைப்பதை விட்டுவிட்டு, அடுத்த நபருக்கே உங்கள் நேரத்தையும் பெலத்தையும் பணத்தையும் செலவழித்து அவரைக் குறித்தே கவலைப்படுவீர்கள்..

- நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

  உங்கள் பகுத்தறியும் தன்மை பாழாக்கப்பட்டு, உங்கள் இருதயத்தில் இருக்கும் அந்த நரகலான விக்கிரகம் உங்களை வஞ்சித்துப் போட்டுவிடும்.

- நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

  நீங்கள் வேதாகமத் தரத்தைத் தாழ்த்த, நூதன உபதேசங்களைக் கண்டுபிடிப்பீர்கள். உங்கள் ஆத்துமப் பிணையாளி அல்லது கூட்டாளியின் பாவங்களைக் கண்சாடையாய் விட்டுவிடுவீர்கள் அல்லது மறைத்து விடுவீர்கள்.

Chapter 01

பகுதி – 3

# ‘ஆத்துமப்பிணைப்பு’ அல்லது ‘இதய பிணைப்பின்’ RED LIGHT அறிகுறிகள்

- **நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..**

  நீங்கள் செய்வது எல்லாவற்றிலும் சலிப்பு வந்துவிடும். உங்களால் ‘கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய்’ இருக்க இயலாது.

- **நீங்கள் உங்கள் பிள்ளைகளோடு ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..**

  அது கூட உங்கள் குடும்ப வாழ்வைக் குலைத்துவிடும். உங்கள் பிள்ளைகளுக்காக உங்கள் வாழ்க்கைத் துணைவரையே அசட்டை செய்து விடுவீர்கள்.



- **நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..**

  அது, சம்பந்தப்பட்ட நபரோடு உங்கள் சரீரங்களை ஈர்த்து இணைத்து வேசித்தனத்திற்குள் உங்களை விழவைத்துவிடும். அன்பான வார்த்தைகளில் மயங்கி எத்தனை பெண்களும் விசுவாச சகோதரிகளும் பரிதாபத்தாலும் இரக்கத்தாலும் தங்கள் சரீரங்களை ஆண்களுக்கு விட்டுக் கொடுத்திருக்கிறார்கள் !

  ஆண்புணர்ச்சி, பெண்புணர்ச்சி மற்றும் ஓரினச் சேர்க்கை பாவத்திற்கும் இது தான் காரணம். இந்தத் ‘தம்பதிகளைப்’ பிரிப்பது இயலாத காரியம்.

நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

அந்த நபரோடு ஒரு தனிக் கலாச்சாரத்தையும் அந்தரங்க உலகத்தையும் உருவாக்குவீர்கள். உங்கள் பாஷை, ஜோக்குகள், உங்கள் கனவுகள், ஆர்வங்கள் அனைத்தும் உங்கள் இருவருக்குள்ளேயே இருப்பதால், மற்ற நல்ல உறவுகளைக்கூட துண்டித்துவிட்டு அந்த ஒரு நபருடன் மட்டுமே ஒட்டிக் கொண்டிருப்பீர்கள்.

நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

உங்களுக்கு சாக வேண்டும் என்ற ஆசையும் தற்கொலை எண்ணங்களும் எழும்பலாம். உங்கள் ஆத்துமா அடுத்த நபரோடு கட்டப்பட்டிருப்பதால், அவர் உங்களை விட்டுப் பிரிந்தால், உங்களுக்கு வாழ்க்கையே அர்த்தமற்றதாகிவிடும்.

நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

கொலை செய்யத் துணியுமளவுக்கு வெறுப்பு உங்களுக்குள் எழும்பும். 'அசட்டை செய்யப்பட்ட அன்பு அகோரப் பகையாகிவிடும்' என்பது ஒரு பழமொழி. பொறாமையினாலும் உடைந்த உறவுகளினாலும் நடந்த கொலைகள் தான் எத்தனை !

நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

அடுத்த நபருக்குள்ளும் அவர் உறவினர்களுக்குள்ளும் கிரியை செய்யும் சாபங்களும் பிசாசுகளும் உங்களையும் தாக்கும். கிறிஸ்துவின் மேலிருந்த ஆதி அன்பையும் அர்ப்பணத்தையும் நீங்கள் விட்டுவிட்டதால் பிசாசுகளும் சாபங்களும் உங்களைத் தாக்க கதவைத் திறந்து விட்டிருப்பீகள்..

நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

தேவ பிரசன்னத்தில் போதுமான நேரம் செலவிடவும் அவருடைய ஆவியிலும் அன்பிலும் மூழ்கித் திளைக்கவும் போராடுவீர்கள். உங்கள் இதயமும் மனமும் இரண்டு நினைவுகளில் சிக்கி அல்லாடி அவதிப்படும். நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் நினைவெல்லாம் அந்த நபரைப் பற்றியே தான் இருக்கும். ஜெபத்தில் வேரூன்றி சிந்தை பதிப்பது உங்களுக்குச் சிரமமும், கடும் போராட்டமுமாகிவிடும்.

நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் இருந்தால்..

உங்கள் மேலிருக்கும் தெய்வீக அழைப்பை நிறைவேற்ற போராடுவீர்கள். உங்கள் மேலிருக்கும் பரம அழைப்பைவிட, அடுத்த நபர் மகிழ்ச்சியாக இருக்கிறாரா என்பதுவே உங்களுக்கு அதிமுக்கியமாக இருக்கும். அந்த நபரின் விருப்பமும் எதிர்பார்ப்பும் உங்களை சுலபமாகத் திசை திருப்பிவிடும்.

நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

உங்கள் ஊழிய வேகம் குறைந்து கொண்டே வரும். இதுவே உங்களுக்கு வரும் பெரிய எச்சரிக்கை அடையாளம். இந்தச் சூழ்நிலையை அப்படியே தொடர விட்டுவிட்டால் உங்கள் தேவனே உங்களுக்கு விரோதமாக எழும்பி விடுவார். அவர் தனக்குரிய இடத்தையோ மகிமையையோ, எவருக்கும் எதற்கும் கொடுக்காத வைராக்கியமுள்ள தேவனல்லவா?

நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

இயேசு உங்களுக்குள் வாழ்ந்து, உங்கள் உணர்ச்சிகள் மூலம் தமது அன்பை மற்றவர்களுக்குக் காட்ட முடியாது. காரணம் உங்கள் உணர்ச்சிகள் எல்லாம் அடுத்த நபர் மீதே பின்னிப் பிணைந்து கிடக்கிறது. சாத்தான் அந்த நபரின் கண்களில் ஒரு சொட்டு கண்ணீரை வரவழைத்தால் போதும்.. அதன் மூலம் உங்களை தேவ ஊழியத்தில் உதவாக்கரையாக்கி விடுவான்.

நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

நேரத்தைச் சரியாய்க் கையாளச் சிரமப்படுவீர்கள். உங்கள் ஜெபநேரமும் வேத தியான நேரமும் தேவையற்ற தொலைபேசி அழைப்புகளாலும் அடுத்தவரை சமாதானப்படுத்தி திருப்திப்படுத்துவதற்குமே விரயமாகிவிடும். ஆவிக்குரிய நன்மையற்ற, மாம்சீகப் பேச்சுக்களாலும், சோக நினைவுகளாலும் நேரத்தை வீணடிப்பீர்கள்.



நீங்கள் ஆத்துமப் பிணைப்பில் சிக்கியிருந்தால்..

உங்கள் வாழ்க்கைத் துணைவரோடு மகிழ்ச்சியாக வாழ முடியாது. ஒவ்வொரு முறை அந்த ஆள் போன் செய்யும்போதும் நீங்கள் ஓடுவீர்கள். அதனால் உங்கள் வாழ்க்கைத் துணைவர் புண்பட்டு புறக்கணிக்கப்படுவார். கசப்பு உள்ளே நுழைந்து அது உங்கள் திருமண வாழ்க்கையைக் கொன்றுவிடும்.

இந்தப் பிணைப்பு கணவனுக்குள் இருந்தாலும் சரி, மனைவிக்குள் இருந்தாலும் சரி, அது அவர்கள் இருவர் உறவையும் நிச்சயம் பாதிக்கும்.

(லேவியராகமம் 18ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள தகாத சரீர உறவுகள் விபச்சார வேசித்தனத்தில் முடிவது உண்மையானாலும், அவைகளின் ஆரம்பம் என்னவோ இது போன்ற ஆத்துமப்பிணைப்புகளில் துவங்குவது தான் ! சந்தேகமே இல்லை.)



Chapter 01

பகுதி – 4

# ‘ஆத்துமப்பிணைப்பு’ அல்லது ‘மனங்களின் பிணைப்பு’ உருவாகும் விதங்கள்

ஆத்துமப் பிணைப்புகள் மூன்று முக்கிய வழிகளில் உருவாகின்றன.

1. இரத்த உறவு மூலம்..

2.பாலியல் உறவு மூலம்..

3.நெருக்கமான ஐக்கியங்கள் மூலம்..

திருமண உடன்படிக்கையில் முதல் முறை ஒரு பெண் கணவனோடு இணையும்பொழுது வெளிப்படும் இரத்தத்தால் அந்தத் திருமண உறவு முத்திரையிடப்படுகிறது. இது தேவன் தமது பரிபூரண ஞானத்தால் திட்டமிடப்பட்ட ஒன்று..



## 1. இரத்த உறவு :

இரத்தத்திற்குள்ள தனிச்சிறப்பினால் இரத்த உறவிலிருக்கும் குடும்பத்தினரிடையே ஆத்துமக் கட்டுகள் சுலபமாக உருவாகி விடுகின்றன..

- தாய்க்கும் மகளுக்கும் உள்ள நெருக்கமான உறவினால், ஆத்துமப் பிணைப்பினால், பின்னாட்களில் கணவனோடு வாழ முடியாமல் தாய்வீடு திரும்பும் மகள்கள் எத்தனை !

- மகனுக்கும் தாய்க்கும் உள்ள பாசப்பிணைப்பினால் திருமணமே பண்ணிக்கொள்ளாத 'அம்மாஞ்சிப் பயல்கள்' எத்தனை ! அப்படியே கல்யாணம் பண்ணினாலும் மகனுக்கும் மருமகளுக்கும் நடுவே நந்தியாக நிற்கும் அம்மாக்கள் எத்தனை பேர்! தன் ஒரே மகள் மேல் பாசத்தைக் கொட்டி வளர்த்து, அவள் பெரியவளாகிவிட்ட பின்னும் புகுந்த வீடு புகுந்த பின்னும் தொப்புள் கொடி அறுக்கப்படாத எத்தனை பெண் பிள்ளைகள்! அதனால் வரும் பின் விளைவுகள் ! இது வெறும் பாசப் பிணைப்பு அல்ல.. ஆபத்தான ஆத்துமப் பிணைப்பு !

- உடன் பிறந்த சகோதர சகோதரிகளோ அல்லது ஒன்றுவிட்ட உறவுகளோ.. அவர்கள் உறவினர்களாக மட்டுமல்ல, நண்பர்களாகவே நட்பு பாராட்டி, பின்னிப் பிணைந்து, அவர்களுக்குள் அவர்கள் அறியாமலேயே உருவாகிவிடும் ஒருவகை ஆத்துமப் பிணைப்பு அவர்களை மனரீதியாக மட்டுமல்ல, உடல்ரீதியாகவும் இணைத்துவிடும் அளவுக்கு இழுத்துச் சென்றுவிடும் அபாயங்கள் ஏராளம் ! அவர்களது நெருக்கம், அவர்கள் உயிருக்கே உலைவைக்கும் அளவுக்கு பிசாசு அவர்களைத் தொடர்ச்சியான வலையில் சிக்கவைத்து சின்னாபின்னமாக்கி விடுவான்..

- 2 சாமுவேல் 13 ன்.. அம்னோன் - யோனதாப்
  தாமார் - அப்சலோம் சங்கிலித் தொடர் சம்பவங்கள்-ஜாக்கிரதை!

  அளவுக்கதிகமான ஆத்துமப்பிணைப்பு அல்லது மனங்களின் பிணைப்பு அநேகமாக, தவறான பாலியல் தொடர்புகளிலும், அதுவே மிதமிஞ்சிப் போய் கொலையிலும் தற்கொலையிலும் முடிந்துவிட எல்லா வாய்ப்புகளும் நிச்சயம் உண்டு - எச்சரிக்கை !

- இவை மட்டுமல்ல, இரத்த உறவிலுள்ள உறவினர்களுக்குள் ஏற்படும் ஆத்துமப் பிணைப்பு - ஒருவர் ஒருவருக்குள் இருக்கும் அசுத்த ஆவிகளுக்கு மிகச்சுலபமாக அதிகாரம் கொடுத்து, அவைகள் ஒருவரிடமிருந்து ஒருவருக்குள் புகுந்து அவர்கள் மேல் ஆளுகை செய்ய வழிவகுக்கிறது.

- மிக நெருக்கத்தில் ஈடுபடுபவர்கள் தங்கள் கைகளில் கீறிக்கொண்டு அந்த இரத்தத்தினால் தங்களுக்குள் உடன்படிக்கை செய்துகொண்டு அதன் விளைவு தெரியாமல் சிக்கிக்கொள்ளும் சம்பவங்கள் ஏராளம்..

- "பச்சை குத்திக் கொள்வதை" வேதம் அனுமதிப்பதில்லை. ஆனாலும் தங்களுக்கு நெருக்கமானவர்களின் பெயர்களை பச்சை குத்திக்கொண்டு அதில் வெளிப்படும் இரத்தத்தின் மூலம் சம்பந்தப்பட்ட நபர்களோடு தாங்கள் அறியாமலேயே அசுத்த ஆவிகளுக்கு இடம் கொடுத்து அவைகள் தங்களை ஆட்டிப் படைக்க இடம் கொடுத்துத் தவித்துக் கலங்குபவர்கள் எத்தனை எத்தனை பேர் !

## 2. பாலியல் தொடர்பு :

ஆத்துமப் பிணைப்பை தானாகவே ஏற்படுத்தக்கூடிய மற்றொரு வழி பாலியல் தொடர்பாகும். ஆதியாகமம் 34 ம் அதிகாரத்திலுள்ள தீனாளின் வாழ்க்கை இதற்கு நல்ல உதாரணம்.

- தீனாள் தேசத்துப் பெண்களைப் பார்க்கப் புறப்பட்டாள்..

- அத்தேசத்தின் பிரபுவாகிய சீகேம் அவளைக் கண்டு, கொண்டு போய் அவளோடு சயனித்து அவளைத் தீட்டுப்படுத்தினான்..

- அவனுடைய மனம் தீனாளின் மேல் பற்றுதலாயிருந்தது..

இந்தத் தவறான பாலியல் தொடர்பினால் அவர்களுக்குள் ஆத்துமப் பிணைப்பு ஏற்பட்டது. இந்த வசனங்கள் ஒருவேளை அவர்களுக்குள் ஒரு தூய்மையான அன்பும் பாசமும் ஏற்பட்டதைப் போலத் தெரியலாம். அதன் பயங்கர பின்விளைவை அறிவோம்.

ஒழுக்கக்கேடு நிறைந்த மேற்கத்திய நாடுகளில் வாழும் இளம்பிள்ளைகளின் ஆத்துமாக்கள் இத்தகைய பாலியல் தொடர்புகளினால் சுக்குநூறாக உடைந்திருப்பதை கண்கூடாகப் பார்க்கலாம். உங்களுக்கு எவருடனாவது இன்னும் ஆத்துமப் பிணைப்பிருந்தால், அது கற்பனை உறவாய் இருந்தால் கூட உங்கள் திருமண வாழ்க்கையை சந்தோஷமாய் உங்களால் அனுபவிக்க முடியாது. யாரோ ஒருவர் உங்கள் வாழ்க்கையில் இருக்கிறார்கள் என்பதை உங்கள் வாழ்க்கைத் துணைவர் எப்படியாவது உணருவார். அதனால் அவரால் உங்களை முழுவதும் நம்ப முடியாது.

கற்பனை உறவினாலும் ஆத்துமப் பிணைப்புகள் உருவாகலாம். இன்றைய வாலிபர்கள் சினிமா கதாநாயகர்களையும் சினிமா நடிகர்களையும் இசையமைப்பாளர்களையும் விக்கிரகங்களாக்கி அவர்களோடு உறவாடுவது போல கனவு கண்டு கொண்டிருப்பவர்கள் உண்டு. அப்படிப்பட்ட மனப்படங்கள் அவர்கள் திருமணத்தின் நெருக்கமான உறவில் கூட அவர்கள் முன் தோன்றும்.

**Extra Marital Affairs** என்னும் திருமண உறவுக்கு வெளியே கொண்டிருக்கும் பற்றுதலும் தகாத உறவும், **Pre-marital sex** என்று சொல்லப்படும் திருமணத்துக்கு முன் ஈடுபடும் உறவுகளும் ஆத்துமப் பிணைப்பின் பிள்ளைகளே!

இவைகள் இன்று உலக மக்களில் மட்டுமல்ல, சபைக்குள்ளும் காணப்படுவது தான் இருதயத்தைப் பிழியும் உண்மை.

(ஆதி நாட்களில் கொரிந்து சபையில் காணப்படவில்லையோ என்று சப்பைக்கட்டு கட்டும் அறிவு ஜீவிகளுக்கும் இன்று குறைவில்லை)

எத்தனையோ சபைகளில் இளம் ஊழியர்களையும் போதகர்களையும் விக்கிரகமாக்கி, அவர்களையே நெஞ்சில் வைத்து பூஜிக்கும் இளம் பெண்களும், வாலிபப் பெண்களோடு கனவுலகில் சஞ்சரிக்கும் எத்தனையோ வாலிப விசுவாசிகளும் நடுத்தர வயதினரும் கூட இன்றும் உண்டு.

வரம் பெற்ற, புகழ் பெற்ற ஊழியர்களின் போட்டோக்களைத் தங்கள் பைபிள்களில் வைத்துக் கொண்டும் அவர்களை **Poster boy** ஆக்கி அவர்களது போஸ்டர்களை தங்கள் வீடுகளின் உள்ளறை சுவர்களில் ஒட்டி வைத்து அலங்கரித்து அழகு பார்க்கும் பெண்களையும், ஆண்களையும், தற்போது தங்களது செல் போன்களின் வால்பேப்பரில் **permanent** ஆகவே போட்டு அவ்வப்போது பார்த்து ஏங்கி வரும் அவலங்களும் யாரும் அறியாதது அல்ல.

இந்த மதிமயக்கத்திலும் ஏக்கத்திலும் அவர்கள் கிடைக்காத விரக்தியிலும், உபவாசம் என்ற பெயரில் பட்டினி கிடந்தே பைத்தியம் பிடித்துச் செத்துப்போன இளம் விசுவாசிகளையும் வாலிப ஊழியர்களையும், தற்கொலை செய்து கொண்டவர்களையும், உடைந்து போன குடும்பங்களையும், 'எங்க பாஸ்டர் வந்தால் தான் சாப்பிடுவேன்' என்று அடம்பிடிக்கும் சகோதரிகளையும், ரயில் தண்டவாளத்தில் படுத்துக்கொண்டு 'பாஸ்டர் வந்தால் தான் வீட்டுக்கு வருவேன்' என்று முரண்டுபிடிக்கும் விசுவாச கேஸ்களையும் அறிவீர்களோ ?



‘உங்களைத் தான் கர்த்தர் எனக்குக் காட்டினார்..’ என்றும், ’அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டும்’ என்றும் சொல்லிக்கொண்டு திரியும் கூட்டம் ஏராளம்.

இது எல்லாமே ‘ஆத்துமப் பிணைப்பின்’ பிரதிபலிப்புகளே !

தங்கள் போதகர் மீது உள்ள அபரிமிதமான அன்பினால் அவருக்கு எல்லா சேவையும் கண்மூடித்தனமாகச் செய்யும் எத்தனை அறிவிலிப் பெண்கள் இன்றும் உண்டு !

## 3. நெருக்கமான உறவு

ஆத்துமப் பிணைப்பு உருவாவதின் மூன்றாவது காரணம், நெருக்கமான உறவு.

பல வேளைகளில் ஆத்துமப் பிணைப்பு, ‘ஆவிக்குரிய’ வடிவத்தில், சேர்ந்து ஜெபிக்கும்பொழுதோ, கூடி ஆலோசிக்கும் பொழுதோ, குழுவாக ஊழியத்துக்குச் செல்லும்பொழுதோ, மறுபாலாரோடு அதிக நேரம் சம்பாஷணைகளில் செலவிடும் பொழுதோ மிக அழகாக உருவெடுக்கிறது..

பிசாசின் இந்த நயவஞ்சகமான தந்திரத்தினால் எத்தனை குடும்பங்கள் பாழாக்கப்பட்டிருக்கிறது!

» தலைவருக்கும் காரியதரிசிக்கும் (PA) இடையில் நடக்கும் எத்தனை கதைகளை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்? ஐயோ ! பிசாசின் இத்தகைய விசேஷித்த ஆயுதங்களுக்குப் பலியாகும் ஆவிக்குரிய தலைவர்கள் தான் எத்தனை !

‘ஓ ! என்னுடைய PA எவ்வளவு ஆவிக்குரியவள் ! அவளைப் போல என்னை யாரும் புரிந்துகொள்ள முடியாது.. என் வாழ்க்கையையும் ஊழியத்தையும் குறித்து அவளுக்கு எவ்வளவு அக்கறை !’ என்று அவர்கள் சிந்திக்கத் துவங்குகின்றார்.. ஆனால் அவரது மனைவியோ, வீட்டில் உட்கார்ந்து பிள்ளைகளைக் கவனித்துக் கொண்டு, அவரது துணிமணிகளைத் துவைப்பவளாய், அவருக்குப் பிடித்தவற்றை சமைத்து, வீட்டைப் பராமரித்துக் கொண்டிருப்பாள்.



» இவரோ வேலை வேலை என்றும், ஊழியம் ஊழியம் என்றும் நாள் முழுவதும் வெளியில் இருந்து விட்டு இரவில் வெகுநேரம் சென்று களைத்துப் போய் வீடு திரும்புவார். மனைவி, பிள்ளைகளிடம் பேசக்கூட நேரமில்லாமல் அப்படியே தூங்கிப் போவார். மனைவியோ அவரை எதிர்பார்த்து எதிர்பார்த்து கணவனோடு பேசவோ, நேரம் செலவிடவோ அன்பை பகிர்ந்து கொள்ளவோ இயலாமல், கணவனது நேரத்தையும் அன்பையும் இழந்து நாளடைவில் மனம் சலித்து விடுகிறார்.

ஆனால் கணவனோ, தனது பெரும்பகுதி நேரத்தை அலுவலகத்தில் அந்தப் பெண் காரியதரிசியோடு செலவிடுகிறார். இதோ, வலை விரிக்கப்பட்டாயிற்று.இதற்குள் ஆத்துமப்பிணைப்பு அதிகரித்து விடுகிறது.முடிவோ உலகம் அறிந்த சோகக்கதை.

» விசுவாசிகளும் இத்தகைய ஆபத்துகளில் எளிதாக சிக்கிவிடுகிறார்கள். நன்கு ஜெபிக்கும், ஊழியம் செய்யும் விசுவாசிகளுக்குள் கூட ஆத்துமப் பிணைப்பு என்ற வாகனத்தின் மூலம் பிசாசு நுழைகிறான்.

'அந்த அக்கா என்ன fireஆ ஜெபம் பண்ணுவாங்க ! ஆவியில அப்படி நிறைவாங்க! அவங்க ஜெபத்தைக் கேட்டுக்கிட்டே இருக்கணும் போல இருக்கும் !

என் ஆவி அவங்க கூட தான் ஒத்துப்போகுது.. அவங்க இருந்தா தான் ப்ரேயர் க்ரூப்பே நிறைஞ்ச மாதிரி இருக்குது.. அவங்க இல்லன்னா என்னவோ மாதிரி இருக்குது.. அவங்க வந்தா தான் நான் ஜெபத்துக்கே வருவேன்..'

இப்படிச் சொல்லும் ஜெபக்குழுத் தம்பிக்கு அந்த அக்காவோடு ஆத்துமப் பிணைப்பு உருவாகிக் கொண்டிருக்கிறது என்பது நிச்சயம்.

எத்தனை அக்கா - தம்பி ஆத்துமப் பிணைப்புகள்!
கடைசியில் நிலைமையே வேறாகிறது!

» 'அந்த அண்ணன் சூப்பரா பாடுவாங்க.. என்ன அழகா கீ போர்டு போடுறாங்க ! அண்ணா குரல்ல ஒரு அபிஷேகம் பாருங்க....' அண்ணனின் கொயர் க்ரூப்பிலுள்ள தங்கச்சிமாருக்கு நாளடைவில் அண்ணன் மேல் ஒரு கண்.. கடைசியில் தன்னைவிட மிகக் குறைந்த வயதில் தன் கடைசி தங்கை போலிருந்த ஒரு வாலிபப்பெண்ணை திருமணம் செய்கிறார் ஓர்ஷிப் அண்ணன்..

அல்லது அண்ணன் ஏற்கனவே மணமானவராகவோ , இளம் பாஸ்டராகவோ இருந்தால்- இந்தப் பாடல்குழு தங்கைகளின் அன்புத் தொல்லையால் ‘ஆவிக்குரிய’ அண்ணனுக்கும் - அண்ணிக்குமிடையே அன்றாடம் வீட்டில் அக்கப்போர் தான். இதினால் தாய் வீடு போய் சேர்ந்த அண்ணிகளும் அவர்கள் வாழ்க்கையே நாசமான சம்பவங்களும் கண்கூடு..

இவை எல்லாமே ஆத்துமப் பிணைப்பின் ‘பக்க விளைவுகள்’ தான்.

» குழுவாக ஊழியம் செய்யப் போகும் குழுக்களில் டீம் லீடர் மேலோ, நன்கு ஊழியம் செய்யும் சகோதரி மீதோ ஆத்துமப் பிணைப்பு ஏற்பட்டு - குழுவே உடைந்து- ஊழியம் பாதித்து- ஒன்றுமில்லாமல் போன கதைகள் எத்தனை எத்தனை!

உங்கள் சபைகளில் ஒவ்வொருவரோடு உள்ள உறவுகளைக் குறித்தும் மிகக் கவனமாயிருங்கள். குறிப்பிட்ட நபரோடு உங்கள் சிந்தையிலோ, நேரத்திலோ, உணர்ச்சிகளிலோ எல்லையைக் கடந்து விட்டீர்களோ? ஜாக்கிரதை !

உங்கள் ஆத்தும எதிரியானவன் ’ஆவிக்குரிய சாயம்’ பூசி உங்களை மற்றவர்களோடு பிணைக்கப் பார்ப்பான்..

சகோதரிகளே ஜாக்கிரதை !

போதகர்களே, பெண்களுக்கு ஆலோசனை கொடுக்கும்போது ஜாக்கிரதையாய் இருங்கள். எதிர்பாலாருக்கு ஆலோசனை கொடுக்கும் பொழுதோ வீடு சந்திக்கச் செல்லும் பொழுதோ கூடுமானவரை உங்கள் மனைவியை உடன் வைத்துக் கொள்ளுங்கள். தனியே மட்டும் செல்லாதீர்கள்.



எதிர்பாலார் தங்கள் உள்ளத்தைத் திறந்து தங்களது மிகவும் தனிப்பட்ட காரியங்களில் உங்களது ஆலோசனையைத் தேடும்பொழுது உங்கள் இருவருக்குமிடையே உங்களையும் அறியாமலேயே மாம்ச உணர்ச்சிகளும், புரிந்து கொள்ளுதலும் பெருகி, எதிர்பாலாரோடு உங்கள் ஆத்துமாக்கள் சுலபமாய் பின்னிப் பிணைந்து விடலாம். Be very very careful and alert .

» 'நம்ம சர்ச் சிஸ்டர் தான? நம்ம யூத் க்ரூப் பிரதர் தான ? என்று Praise the Lord ல ஆரம்பித்து, smsல வசனமும் whatsap ல ஸ்க்ரிப்ச்சர் இமேஜூம் போட ஆரம்பித்து, சுகநலன் விசாரித்து, ப்ரேயர் பாய்ன்ட்ஸ் அனுப்பி.. இப்படியே பேசிப் பேசி ராசியாகி.. சின்னச்சின்ன ஆசைகளை வளர்த்து வளர்த்து கடைசியில் எங்கேயோ போய் நிற்கிற அவலங்கள் நல்ல ஆவிக்குரிய சபைகளையும் இன்று விட்டு வைப்பதில்லை.

தங்கள் சபை வாலிபர்களின் இப்படிப்பட்ட கேஸ்களை எப்படி டீல் பண்ணுவதென்று தெரியாமல் தலையில் கை வைத்துக் கொண்டு அழும் பாஸ்டர்கள் எத்தனை பேர் !

எல்லாம் இந்த ஆத்துமப் பிணைப்பு பண்ணும் அக்கிரமம் தான்!

'என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே கர்த்தாவே..உம்முடைய முகத்தையே தேடுவேன் என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று..(சங் 27:8)' என்று தாவீது சொன்ன நாட்களெல்லாம் மலையேறிப் போய் காலை எழுந்ததும் face book நண்ப நண்பிகளின் முகம் தேடும் அவலத்தை நீக்க ஆண்டவர் (இரங்க) இறங்க மாட்டாரோ ?

Chapter 01

பகுதி – 5

# ஆத்துமப் பிணைப்பும் அன்றாட வாழ்க்கையும்

இது வரை நாம் பார்த்து வந்ததெல்லாம் ஆத்துமப் பிணைப்பு என்றால் என்ன?, அதின் அறிகுறிகள் எவை ? அது உருவாகும் விதம் எப்படி ? என்பதையே..

இனி, இந்த ஆத்துமப் பிணைப்பு என்ற நோய் ஒருவரது அன்றாட வாழ்வில் ஒன்றரக் கலந்து விட்டால், அது தேவனோடு கூட உள்ள அவரது உறவு, அவரது அழைப்பு, ஊழியம், குடும்பம், படிப்பு, வேலைகள், சபை என்னும் அன்றாட காரியங்களில் எப்படிப்பட்ட எதிர்மறை தாக்கத்தையும் பாதிப்பையும் உண்டாக்குகிறது என்பதையும், இந்த ஆக்டோப்பஸ், தன் கைகளை எங்கெல்லாம் நீட்டி நமது இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிறது என்பதையும், அதிலிருந்து எப்படி விடுபட்டு மகிமையான விடுதலையை எப்படி அனுபவிப்பது என்பதையும் காண்போம்..

இதோ வருகிறது.. அன்றாட வாழ்க்கையின் ஒரு நீண்ட பட்டியல்..

1.ஆத்துமப் பிணைப்பும் அன்பும்

2. ஆத்துமப் பிணைப்பும் பயமும்

3. ஆத்துமப் பிணைப்பும் உங்கள் சிந்தனைகளும்

4. ஆத்துமப் பிணைப்பும் உங்கள் ஜெபவாழ்வும்

5. ஆத்துமப் பிணைப்பும் உங்கள் ஊழியமும்

6. ஆத்துமப் பிணைப்பும் உங்கள் மேலான அழைப்பும்

7. ஆத்துமப் பிணைப்பும் உங்கள் இலக்கும்

8. ஆத்துமப் பிணைப்பும் உங்கள் உணர்ச்சிகளும்

9. ஆத்துமப் பிணைப்பும் உங்கள் குணாதிசயமும்

10. ஆத்துமப் பிணைப்பும் உங்கள் விசுவாசமும்

11. ஆத்துமப் பிணைப்பும் மனத் தளர்ச்சியும்

12. ஆத்துமப் பிணைப்பும் மன்னிப்பும்

13.ஆத்துமப் பிணைப்பும் உடல் ஆரோக்கியமும்

14. ஆத்துமப் பிணைப்பும் பிள்ளை வளர்ப்பும்

15. ஆத்துமப் பிணைப்பும் உங்கள் சந்ததியும்

16. ஆத்துமப் பிணைப்பும் ஆவிக்குரிய போராட்டமும்

17. ஆத்துமப் பிணைப்பும் தனிப்பட்ட உறவுகளும்

18. ஆத்துமப் பிணைப்பும் குடும்ப உறவுகளும்

19. ஆத்துமப் பிணைப்பும் வஞ்சகமும்

20. ஆத்துமப் பிணைப்பும் சாத்தானும்

21. ஆத்துமப் பிணைப்பும் உங்கள் மணவாழ்வும்

22. ஆத்துமப் பிணைப்பும் சாபங்களும்

23. ஆத்துமப் பிணைப்பும் எதிர்பாலினரும்

24. ஆத்துமப் பிணைப்பும் தெய்வீக உறவுகளும்

Chapter 01

பகுதி – 6

# ஆத்துமப் பிணைப்பும் அன்பும்

நம் தேவன் அன்பின் தேவன். அவர் அன்பாகவே இருக்கிறார். உண்மை அன்பின் மூலகாரணர் அவர் தான். தமது பிள்ளைகள் பரிபூரண பரிசுத்த அன்பில் வாழ வேண்டும் என்பதே அவரது உள்ளத்தின் விருப்பம்.

வேதம் சொல்கிறது.. 'ஒண்டியாய் இருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம். அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும்.

ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கி விடுவான்.ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ.. அவனைத் தூக்கிவிட துணையில்லையே (பிரசங்கி 4:9,10)

ஆத்துமப் பிணைப்பு அடுத்த நபரோடு உங்களை மூழ்கடித்துவிடும். கற்பனை செய்து பாருங்கள். கீழே விழுகிற நபரோடு நீங்கள் கட்டப்பட்டிருந்தால் என்ன நடக்கும்? நீங்களும் அந்த நபரோடு சேர்ந்து விழுவீர்கள்.

உங்கள் வாழ்க்கையை சோதித்துப் பாருங்கள். உங்களுக்கு யாருடனாவது ஆத்துமப் பிணைப்பு இருக்கிறதா ? அந்த நபர் வியாதிப்பட்டால் நீங்கள் கலங்கித் தவித்து சாப்பிடவும் கஷ்டப்படுவீர்கள். அவர்களை சிறிய அளவில் பாதிக்கும் வியாதிகூட உங்களைப் பெரிதும் பாதித்து, உங்கள் தூக்கத்தைக் கெடுத்து உங்கள் உடல் நலத்தையே கெடுத்து விடும்.

அவர்கள் சோர்ந்து போய் இருந்தால், நீங்களும் தூக்கத்திற்கும்,நம்பிக்கையற்ற நிலைக்கும் சென்று விடுவீர்கள். தேவன் உபவாசித்து ஜெபிக்கும்படி உங்களுக்கு பாரம் கொடுப்பது வேறு விஷயம். உங்களுக்கு அன்பானவர்கள் வியாதிப்படும்போது உங்களால் மகிழ்ச்சியோடு சாப்பிடமுடியாது என்பது உண்மை.

ஆனால் ஆத்துமப் பிணைப்பில் சிக்கி விட்டவர்களுக்கு இது சாத்தியமே இல்லை. மீண்டும் சொல்லுகிறேன்.. நீங்கள் உங்களையே, 'நான் தேவனுடைய அன்பில் தான் சிநேகிக்கிறேன்.. அவர் சித்தம் தான் செய்கிறேன்..' என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கும் போதே ஆத்துமப் பிணைப்பு என்னும் ஆயுதத்தால் சாத்தான் உங்களை அழித்து விடுகிறான்..

இயேசு உங்களை மிகவும் நேசித்து தன் சொந்த ஜீவனையே உங்களுக்காகக் கொடுத்தார். ஆனால் அவர் ஒருபோதும் உங்களைக் குறித்து பதறுவதோ பயப்படுவதோ கவலைப்பட்டுக் கலங்குவதோ இல்லை.

தேவ இரக்கத்திற்கும் அன்பிற்கும், ஆத்துமப் பிணைப்பிற்கும் இடையே உள்ள மிகப்பெரிய வித்தியாசம் இது தான்.

அன்பு குணமாக்கவும், சூழ்நிலையை மாற்றவும் உங்களை பெலப்படுத்துகிறது. ஆனால் ஆத்துமப் பிணைப்போ அதே சூழ்நிலையில் உங்களை மூழ்கச் செய்கிறது. இந்த ஆத்துமப் பிணைப்பை உடைப்பது பல நேரங்களில் மிகவும் கஷ்டமாய் தெரிந்தாலும் அறுவை சிகிச்சையைப் போல அது நமது வாழ்க்கையையும் அழைப்பையும் காப்பாற்றிவிடும்.

Chapter 01

பகுதி – 7

# ஆத்துமப் பிணைப்பும் உங்கள் ஊழியமும்

**ஆ**த்துமப் பிணைப்பு உங்கள் ஊழியத்தை எப்படி பாதிக்கிறது ?

பரிதாபமான ஏலியின் உதாரணத்தை இன்னொரு கோணத்தில் பார்க்கலாம்.

ஏலி தனது குமாரர்களை ஆவிக்குரிய பெலத்தில் திருத்தாமல் போனதினால் தனது அபிஷேகத்தையைம், ஊழியத்தையும், உயிரையுமே பறிகொடுத்தான்.

அவனுக்குத் தனது பிள்ளைகளுடன் இருந்த ஆத்துமப் பிணைப்பால் ஆசாரிய ஊழியமே அவன் சந்ததியில் அற்றுப்போயிற்று.

ஆத்துமப் பிணைப்புகள் மிகவும் அபாயமானவை. அது, தேவனைவிட உங்கள் பிள்ளைகளை அதிகமாய் மதிக்கச் செய்து தேவனை கனவீனம் பண்ண வழி செய்துவிடும். அப்படி மனைவி, பிள்ளைகளுக்கு முதலிடமும் முக்கியத்துவமும் கொடுக்கும் பட்சத்தில் உங்கள் ஊழியத்தை நீங்களும் பறிகொடுப்பீர்கள். உங்கள் சந்ததியும் அதை இழந்துவிடும்.

உங்கள் பிள்ளைகளைக் காட்டிலும், வாழ்க்கைத் துணையைக் காட்டிலும் உங்கள் பெற்றோரைக் காட்டிலும், வேறு யாரைக் காட்டிலும் உங்கள் தேவனை மாத்திரம் அதிகமாய் நேசித்து சேவிக்கத் தீர்மானம் செய்து கொள்ளுங்கள்.

ஒரு தேவ மனிதன் தேவனைத் தவிர மனிதரையும், ஏன், தேவன் தனக்குத் தந்த ஊழியத்தையுமே கூட எந்த எல்லை வரை மட்டும் நேசிக்க வேண்டும், இவை மூன்றிலும் எதற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், எதை எந்த எல்லைக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதில் மிக மிகக் கவனத்தோடும் ஞானத்தோடும் தெளிவோடும் இருக்க வேண்டும்.

ஊழியர்கள் ஊழியத்தினிமித்தம் தங்கள் குடும்பத்தை அசட்டை செய்து, மனைவியோடும் பிள்ளைகளோடும் செலவு செய்யும் நேரத்தில் ஊழியம் ஊழியம் என்று வெளியூர்களிலும் வெளியிடங்களிலும் வீட்டை விட்டு வெகுநேரம் வெளியில் இருந்துவிட்டு களைத்துப் போய் ஊழியத்தில் ஏற்பட்ட பாதிப்பினாலோ, நடந்த ஏதோ ஒரு சம்பவத்தினாலோ மன உளைச்சலோடு வரும்போது அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் அவரது அன்பு கிடைக்காமல் நாளடைவில் அந்தப் பிள்ளைகள் தேவன் மேலும், தகப்பன் மேலும், ஊழியத்தின் மேலும் கசப்படைந்து தேவனுக்கு விரோதமாக முரட்டாட்டம் பண்ணுகிறவர்களாய் மாறுகிறார்கள்.

சில ஊழியர்கள் இத்தகைய ஆபத்தைத் தவிர்ப்பதற்காக இதன் அடுத்த எல்லைக்குச் சென்று தங்கள் குடும்பத்துடன் இருக்கும் மட்டுமீறிய உறவினால் தங்கள் வாழ்வில் இருக்கும் தேவனுடைய அழைப்பையே இழந்து விடுவார்கள்.

**ஒரு தேவ ஊழியன் தனது விசுவாசிகளோடு ஆத்துமப் பிணைப்பில் சிக்கிவிட்டால் சபைக்குள்ளேயும் ஊழியத்திற்குள்ளேயும் பாவம் தலைதூக்கும்போது அந்த விசுவாசியோடு அவருக்கிருக்கும் அதீத பாசத்தினால் அவரால் அந்த விசுவாசியைக் கண்டிக்க முடியாமல் கண்சாடையாய் விட்டுவிடும்போது மற்றவர்கள் இடறுவது மட்டுமல்ல அவர் தனது நன்மதிப்பை சபையில் இழக்கிறார்.**

**அது மட்டுமல்ல.. ஒரு தேவஊழியர் தன் உடன் ஊழியருடனோ உடன் தலைவர்கள், பெண் ஊழியர்களுடனோ ஆத்துமப் பிணைப்பில் இருந்தால், அது அவரை பாவத்தில் விழச்செய்கிறது. தூய்மையான உறவுகள் கூட, ஒருவர் ஒருவரோடு அதிகமான நேரம் செலவிடும்போது, அந்த ஊழியரின் குடும்பத்தின் உள்வட்டத்தைப் பாதிக்கிறது.**

**கடைசியில் அது அவருக்கும் அவரது மனைவிக்கும் பிரிவினை உண்டாக்கி ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்து வாழ வைத்துவிடுவது மட்டுமல்லாமல், மனைவியின் மரணத்தில் முடியும் சம்பவங்களும், மனைவி பைத்தியமாகிவிடும் சம்பவங்களும், மனைவி, தானே யாருடனோ ஆத்துமப் பிணைப்பில் சிக்கித் தன் ஊழியக்காரக் கணவனுக்குத் துரோகம் செய்யும் நிலையில், அப்படிப்பட்ட மனைவியை சந்தடியே இல்லாமல் கொலை செய்துவிட்ட சம்பவங்களும் ஆவிக்குரிய வட்டாரங்களில் உண்டு. கள்ளத் தொடர்புகளில் ஈடுபட்ட விசுவாசிகள், அவர்கள் யாருடன் தொடர்பு வைத்திருந்தார்களோ அவர்களையே அரவமின்றி, பயமே இல்லாமல் காலி செய்து விட்ட சம்பவங்களும் உண்டு. இதில் சிக்கிக் குற்ற மனசாட்சியால் தற்கொலை செய்து தங்களையே மாய்த்துக் கொண்டவர்களும் உண்டு.**

இந்த ஆத்துமப் பிணைப்புக்கு அவ்வளவு சக்தி உண்டு. ஆனால் ஆரம்பத்தில் இது தன்னை அவ்வளவு சீக்கிரம் வெளிக்காட்டிக் கொள்ளாது! இதனால் தன் குடும்பத்தையும் எத்தனையோ காலம் கண்ணீரோடு சம்பாதித்த சபையையும் விட்டு விட்டு இரவோடு இரவாக அந்த நபரோடு ஓடிப்போனவர்கள் எத்தனை பேர்!

இந்த ஆத்துமப் பிணைப்பு உங்கள் அறுவடையை வெட்டுக்கிளிகள் பட்சிப்பது போல பட்சித்துப் போட்டுவிடும்.

ஆகவே இன்றே இந்த விதமான எல்லா மாயையயின் கயிறுகளை அறுத்தெறிந்து கற்பனைக் கோட்டைகளை உடைத்தெறியுங்கள்.

உங்கள் பாசத்தையும் நேரத்தையும் எப்படி பயன்படுத்த வேண்டுமென்று தேவ ஞானத்தைக் கேளுங்கள். உங்கள் ஆசீர்வாதமான விலையேறப்பெற்ற அழைப்பையும் உத்திரவாதத்தையும் ஊழியத்தையும் ஆத்துமப் பிணைப்புகள் என்னும் சிறு நரிகளும் குள்ளநரிகளும் அழித்துப் போட விடாதீர்கள். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் !



நன்றி: “ஆண்டவர் வெறுக்கும் ஆத்தும பிணைப்பு”

Rev.**Benita Francis**

**தவறான புரிந்து கொள்தல் :**

இவ்விதமான ஒழுக்கக் குலைச்சல் அல்லது வீழ்ச்சி ஒரே நாளின் சம்பவம் அல்ல.. அது ஒரு தொடர் நிகழ்வு. பல காலமாக, உள்ளூர, நாம் அறியாமலேயே நமக்குள்ளே நமது எண்ணங்களில், சிந்தனை மண்டலத்தில் நடக்கும் இந்தச் சமாச்சாரத்தில், குறிப்பாக இந்தப் பாவத்தைப் பொறுத்தமட்டில் கிறிஸ்தவர்களிடையே இரண்டு வகையான தவறான எண்ணங்கள் உண்டு..

1. மாம்ச இச்சையின் பாவத்தில் யார் விழுந்தாலும் விழாவிட்டாலும் போதகர்களோ, கிறிஸ்தவத் தலைவர்களோ முன்னணி சுவிசேஷகர்களோ, டிவி பிரசங்கிமார்களோ கவுன்சிலிங் கொடுப்பவர்களோ, ஆராதனை வீர வீராங்கனைகளோ, அக்கா, அண்ணன்மாரோ மட்டும் விழவே மாட்டார்கள் என்ற தப்பான எண்ணம்.

2. நான் ஒரு அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசி - நானெல்லாம் இப்படிப்பட்ட பாவத்தில் விழவே மாட்டேன் என்று தன்னைக் குறித்தே மிக மேலான எண்ணம்.

'தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடி எச்சரிக்கையாய் இருக்கக்கடவன்..' (1 கொரி 10: 12,13) என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது.

நீ சர்வ எச்சரிக்கையோடு இல்லாவிட்டால், சோதனை என்ற வலையில் வசமாய் நான் மாட்டிக்கொண்டேன் என்று நீ உணருமுன்னே, நீ அதில் விழுந்து சிக்கிச் சின்னாபின்னமாகி இருப்பாய்..

நன்கு பிரசங்கிக்கிற, போதிக்கிற, பிரபலமான ஒரு ஊழியர் இப்படிப்பட்ட பாவத்தில் விழுந்து விட்டார் என்று திடீரென்று கேள்விப்படும்போது கிறிஸ்தவ உலகமே அதிர்ச்சியடைகிறது - காரணம் - எப்பேர்ப்பட்ட மனிதனும் இதில் விழ எல்லா வாய்ப்பும் எப்போது வேண்டுமானாலும் உண்டு என்ற அப்பட்டமான உண்மையை நாம் மறந்துவிட்டதே !

இப்படிப்பட்ட மாம்ச இச்சையின் பாவக்கண்ணிகளில் விழுவதிலிருந்து இவர்களெல்லாம் விதிவிலக்கு என்றும், யாருக்கு நடந்தாலும் இவர்களுக்கு மட்டும் இப்படி எல்லாம் நடக்கவே நடக்காது என்றும் நாமே நம் தலைவர்களைப் பற்றி மேலான எண்ணம் வைத்திருப்பதால், தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் நீண்ட காலமாகவே யார் கண்ணிலும் படாமலும், பட வாய்ப்பே இல்லாமலும் போய்விடுகிறார்கள் !



# Chapter 02

பகுதி – 1

## 'ஆத்துமப் பிணைப்பு'
## 'ஒரே ராத்திரி' சமாச்சாரமல்ல இது..

ஆத்துமப் பிணைப்பு, இதயப் பிணைப்பு, மனங்களின் பிணைப்பு - இவைகளைத் தொடரும் பாவங்கள், வீழ்ச்சி - யாவும் ஒரே நாளிலோ, ஒரே சந்திப்பிலோ திடீரென்று நடந்து விடுபவைகள் அல்ல - மாறாக ஒன்றன்பின் ஒன்றான, கோர்வையான அடுத்தடுத்த நிகழ்வுகளால் நிறைந்த தொடர்ச்சியான தொடர் நிகழ்வுகள்..

மக்கள் இந்த வகையான பாவத்தில் உடனே விழுவதில்லை, குறிப்பாக அர்ப்பணிப்பும் ஆழமுமான விசுவாசிகள்...

நாம் இப்போது பேசுவது, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் முழுமனதோடு பின்பற்றும் விசுவாசிகளை மட்டுமே என்பதை ஞாபகம் வைத்துக் கொள்வோம். இதில் கிறிஸ்தவத் தலைவர்கள், சபை உறுப்பினர்கள், தேவ பிள்ளைகள், பயபக்தியான பெண்கள் ஆண்கள் - மற்றும் யாவரும் அடக்கம் !

ஆகவே தான் திடீரென்று இப்படிப்பட்ட உயர்ந்த அந்தஸ்திலுள்ள, பதவியிலுள்ள, பொறுப்பிலுள்ள ஒருவரைப்பற்றி திடீரென்று இப்படி ஒரு செய்தியைக் கேள்விப்படும்போது நாம் ஆடிப்போய் விடுகிறோம் - இவரா என்று !

தலைவர்கள் விழும்போது தான், ஓகோ இப்படிப்பட்ட பாவத்தில் யார் வேண்டுமானாலும் விழுந்துபோகும் ஆபத்து உண்டோ என்ற நிர்த்தாட்சண்யமான நிஜம் சுள்ளென்று உறைக்கிறது !

இன்னார் தான் விழலாம் என்ற பேச்சுக்கே இடமின்றி, சர்வ எச்சரிக்கையோடு இல்லாத பட்சத்தில், இது யாரை வேண்டுமானாலும் தன் வலைக்குள் சுண்டிச் சுருட்டி இழுத்துச் சிக்க வைத்துவிடும் அபாயம் எப்போதுமே உண்டு.

நல்ல ஆவிக்குரிய சபையின் ஐக்கியத்தில், அனுதின வசன உபதேசத்தில், வசன மனப்பாடப் பயிற்சிகளில், சபையின் கண்காணிப்பான பாதுகாப்பில் நாங்கள் எல்லாம் இருப்பதால் எங்களுக்கெல்லாம் இது மாதிரியெல்லாம் வர வாய்ப்பே இல்லை என்று இந்தப் பாவத்தைக் குறித்து மட்டும் அவ்வளவு எளிதாகக் குறைத்து எடைபோட்டுவிடக் கூடாது..

இந்த வெளிப்பிரகாரமான பக்தி முயற்சிகள் எல்லாமே 'விழுமுன் காக்க' நமக்கு உதவும் உபகரணங்கள் தானே ஒழிய, இவைகளைக் கிரமமாய்த் தவறாமல் கடைப்பிடித்து வருவதால் மட்டுமே நாம் விழவே மாட்டோம் என்று உத்திரவாதம் தரும் guarantee, warantee அல்ல இவைகள் !

இந்த ஆத்துமப் பிணைப்பின் பிள்ளைகளான இச்சை ரோகங்களில் விழுந்து உடைந்த விசுவாசிகள், ஊழியர்கள் குடும்பங்கள் தான் எத்தனை எத்தனை !

இவைகள் அனைத்தும் உணர்த்தும் உண்மை ஒன்றே ! மேற்கண்ட பக்திமுற்சிகள் யாவும் ஒருவரிடத்தில் ஒருங்கே இருப்பினும், இதற்கு முன்னே உள்ள அத்தியாயங்களில் நாம் கண்ட 'ஆத்துமப் பிணைப்பின் அறிகுறிகளில்' ஒரு சில அறிகுறிகளேனும் ஒருவர் தன்னில் இருக்கக் கண்டும், அந்தச் சிவப்பு விளக்குகள் திரும்பத்திரும்ப மின்னத் தொடங்கும்போதே எச்சரிப்படைந்து ஓடி ஒளிந்து தன்னைக் காத்துக் கொள்ளாமல் போவாராகில் எப்பேர்ப்பட்ட ஆவிக்குரிய ஜாம்பவானேயானாலும் அவரும் இதில் தலைகுப்புற விழுந்து அழியும் சாத்தியங்கள் சத்தியமாகவே உண்டு..

ஆகவே தான் வேதம் தெள்ளத்தெளிவாகச் சொல்கிறது..

‘இஸ்ரவேலின் ராஜா இதினாலே பாவம் செய்தானல்லவா ? அவனைப் போன்ற ராஜா...உண்டாயிருந்ததில்லை ; அவன் தன் தேவனாலே சிநேகிக்கப்பட்டவனாயிருந்தான்.. அப்படிப்பட்டவனையும்... பாவஞ்செய்யப் பண்ணினார்கள்.. (நெகே 13:26)

‘கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவனும், எங்கள் நாசியின் சுவாசமாய் இருந்தவனும் அவர்களுடைய படுகுழியில் அகப்பட்டான்.. அவனுடைய நிழலிலே ஜாதிகளுக்குள்ளே பிழைத்திருப்போம் என்று அவனைக் குறித்துச் சொல்லியிருந்தோமே...’ (புலம்பல் 4:20)

Chapter 02

பகுதி – 2

# உயிர் கொல்லும் உயிர்ப்பிணைப்பு
# ஒழுக்கக் குலைச்சல் - ஒரு சங்கிலித் தொடர் நிகழ்வு

'ஒரே ராத்திரி சம்பவம் ' என்கிற பழமொழி நிகழ்வு கூட ஏதோ ஒரே ராத்திரியிலோ, ஒரே சந்திப்பிலோ நடந்துவிடுவது அல்ல.. கோர்வையாய் நிகழ்ந்த பல சிறு சிறு நிகழ்வுகளின், சம்பவங்களின் விளைவே 'அந்த மாலை நேர மயக்கத்தில் விடிந்த பாவம்..!'

இப்படிப்பட்ட காரியங்களில், சம்பந்தப்பட்ட நபர்கள், சந்தேகத்துக்கே இடமின்றி தாங்கள் போய்க் கொண்டிருக்கும் தங்கள் வழியில் எங்கோ ஓரிடத்தில் தாங்கள் தங்களுக்குள் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருக்கும் சத்தத்தை அசட்டை பண்ணி, கீழ்ப்படியாமலேயே, தாங்கள் திரும்பிவர வழியே இல்லாத ஒரு பாதையில் தாங்கள் பயணித்துக் கொண்டிருப்பதைத் தங்களுக்குள் மிக நன்றாகவே உள்ளூர அறிந்திருப்பார்கள்.

இதில் வேதனை என்னவென்றால், இந்தப் பிணைப்பில் சிக்கிக் கொண்டிருக்கும் இருவர், மிக அருமையான ஊழியத்தில் வெற்றிகரமாய் பயணித்துக் கொண்டிருக்கும் போதே, இருவருமோ, அல்லது இவர்களில் ஒருவரோ, தாங்கள் சந்திக்கும் ஒவ்வொரு முறையும் அல்லது கருகலான ஒவ்வொரு சம்பவத்தின்போதும், இன்னும் இறுகிக் கொண்டேபோகும் தங்கள் பிணைப்பை எப்படியாவது தளர்த்தவோ, பிரிக்கவோ, உடைக்கவோ முயற்சித்தாலும் அது இரும்புப்பிடியாக இருவரையும் இறுக்கிப் பிடித்துக் கொள்கிறது.

ஒரு நாள் அடக்க ஒடுக்கமாகவும், அடுத்த நாளே அலங்கோலமாகவும் ஜீவிப்பதில்லை நம் மக்கள் ! வெளியில் பார்க்க சர்வ இலட்சணமாய்த் தெரியலாம்... ஆனால் ஒழுக்கக் குலைச்சல் என்ற இச்சை ரோகம் என்பது ஒரே நாளில் நடந்து விடுவது அல்லவே அல்ல - அது ஒரு தொடர்ந்தேச்சையான நிகழ்வு !

இது அவ்வளவு லேசாக தன்னை வெளியே காட்டிக்கொள்வதில்லை என்பதால், பார்க்கிற கண்களுக்கு அநேக நேரங்களில் தென்படாமலேயே போய்விடுகிறது.. அதனாலேயே திடீரென்று ஏதோ ஒரே நாளில் நடந்து விட்டது போல வெட்டவெளிச்சமாகிறது ! ஆனால் அப்படி அல்ல..

**ஒழுக்கக் குலைச்சலின் பயங்கரம் :**

எவ்விதப் பாவமானாலும் சரி, அது கர்த்தருக்கும் விசுவாசிக்கும் நடுவே உள்ள உறவை மீறிச் செல்கிறது.. கனி நிறைந்த, பரிபூரண வாழ்வின் தரத்தையே குலைத்து சின்னாபின்னமாக்கும் சக்தி எந்தப் பாவத்துக்கும் உண்டு.. ஆனால் ஒழுக்கக் குலைச்சலும் பாலியல் இச்சையுமான பாவத்தைப் போல கிறிஸ்தவ பரிசுத்தத் திருமண வாழ்வையும் உறவையும், அதின் அஸ்திபாரமான பரிசுத்தத்தையே குலைத்து வேரறுப்பது வேறு எதுவுமில்லை..

ஒரு மனிதனின் தனித்தன்மையையும், மதிப்பையும், தகுதியையும் குலைப்பது இதைப்போல வேறொன்றுமில்லை..

விபச்சாரத்தைப் போல ஒரு மனிதன் மேலுள்ள நன்மதிப்பையும் அவனது நேர்மையையும் மரியாதையையும் கெடுத்து அவனை அவமானமாக்கி, நிர்வாணக் கோலமாய் அவனை நடுத்தெருவில் நிறுத்துவது வேறு ஒன்றுமில்லை..

அது ஒருவனை ஒன்றுக்கும் உதவாத உயிரற்ற ஜந்துவைப் போலாக்கி, ஜனங்களை அன்பின் அடையாளங்களாக அல்ல, இச்சையை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படும் வெறும் மனித உடல்களாகவே மாற்றிவிடுகிறது !



ஆகவே ஒரு காலத்தில் இலை மறைவு காயாக இருந்த இந்தப் பாவம், இப்போது கிறிஸ்தவ வட்டாரங்களில் வெட்கமின்றி வெட்ட வெளிச்சத்தில் நடப்பதைக் குறித்து ஒரு விசுவாசி கண்டிப்பாக அறிந்திருக்க வேண்டியது அவசியம் என்பது மட்டுமன்றி, தன்னையும் தன்னை சுற்றியுள்ளவர்களையும் காத்துக்கொள்ள சர்வ எச்சரிக்கையோடு அவர்கள் இருந்தே ஆக வேண்டும் !

ஆவிக்குரிய கிறிஸ்தவ உலகம் அதிகமதிகமாய் விழுந்து கிடக்கும் இந்தச் சீர்கேட்டை மூடி மறைக்கவும் நியாயப்படுத்தவும் சொல்லப்படும் காரணங்கள் தான் எத்தனை எத்தனை !

இந்த ஒழுக்கக் குலைச்சலான இச்சைக்கு நேராக நடத்தும் பாசப்பிணைப்புகள், இதயப் பிணைப்புகள் இவைகளின் தொடர் நிகழ்வுகளை மிக நுணுக்கமாக விவரிக்கும் இந்த அடுத்தடுத்த பகுதிகளைப் படிக்கும்போதே உன் உண்மையான நிலையை மட்டுமல்ல, உன்னை சுற்றியிருப்பவர்களின் நிலையையும் நிறுத்து நிதானித்து கவனித்துப் பார் !

எழுப்புதலின் மிகப்பெரிய எதிரியான இந்தப் பாவம் உன் கண்களைத் திறக்கப்போவது மட்டுமல்ல, உன்னை இந்தப் படுகுழியிலிருந்து இது தப்புவிப்பதோடு, உன் மூலம் மற்றவர்களையும் இந்தப் படுபயங்கரத்திலிருந்து தப்புவிக்கப் போகிறது !

இந்த ஆபத்தின் பாதையின் எந்தப் பகுதியில் நாம் நின்று கொண்டிருக்கிறோம் என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். கர்த்தரிடமும் நம் சொந்த மனசாட்சியிடமும் உள்ளதை உள்ளபடி மறைக்காமல் ‘பச்சையாக ஒத்துக் கொண்டாலொழிய’ இதிலிருந்து வெளியேறுவது என்பது நடக்காத காரியம் !

கர்த்தரை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக விலகி விலகி தூரமாய் இழுத்துச் செல்லும் இந்த வழியின் முதல் படியிலிருந்து சற்று ஆரம்பிப்போம் !

**ஆரம்பமே - சிந்தனை என்ற சீர்கேடு தான் !**

**எண்ணங்கள் - எச்சரிக்கை !**

**கனவுகள் - கவனம் !**

Chapter 02

பகுதி – 3

# நினைவாலே அணைப்பேன்

**நினைவுகள், எண்ணங்கள் – எச்சரிக்கை !**
**கற்பனைகள், கனாக்கள் – கவனம் !**

பிரியமானவர்களே, இந்தப் பகுதியில் இது வரை வந்ததும், இனிமேல் வரப்போவதும் ஆவிக்குரிய உலகிலும், சபைகளிலும் பரந்து விரிந்து காணப்படும் அன்றாட நிகழ்வுகள் என்ற உண்மைகள், நமக்கு **Uncomfortable** ஆகவும், **Uneasy** யான தர்மசங்கடத்தோடு கூடிய கூச்சமாகவும், விழுங்கவும் ஜீரணிக்கவும் இயலாத ஒன்றாகவும் இருக்கலாம்... ஆனால், நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டுவதல்ல நமது நோக்கம் ! இந்த நிகழ்வுகள் படிப்படியாக எப்படி நிகழ்கிறது என்பதையும், நினைவுகளில் ஆரம்பித்து, சந்திப்புகளில் மகிழ்ந்து, சம்பாஷிணைகளில் மூழ்கி எங்கே போய் முடிகிறது என்பதைத் தெளிவாகக் காட்டி, பிசாசு வைத்திருக்கும் இந்தக் கண்ணியை வெளிக்காட்டி, அறிந்தோ அறியாமலோ அதில் சிக்கியிருக்கும் தேவ பிள்ளைகளை தேவ கிருபையால் அதிலிருந்து தப்புவிக்க உதவ வேண்டுமென்றே சில நிகழ்வுகளை, உள்ளதை உள்ளபடியே காட்ட வேண்டியுள்ளது.. தேவன் நமக்கும், நமது பிள்ளைகளுக்கும், நமது சபைகளுக்கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார் அனைவருக்கும் இரங்குவாராக !

(இந்தப் பகுதியின் இந்தச் செய்தி **'கண்ணி'** The Snare என்ற ஆங்கிலப் புத்தகத்திலுள்ள மேற்கத்தி நாடுகளின் உதாரண சம்பவங்களாய் இருந்தாலும், அதைப்போல ஒத்த சம்பவங்கள் இங்கே நம் நடுவிலும் அப்படியே நடப்பதால், நமது மொழிக்கும் கலாச்சாரத்துக்கும் ஏற்ப இங்கு நடக்கும் சம்பவங்களுக்கு ஏற்றபடியே பெயர்களும் உதாரணங்களும் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன..)

ஒரு முறை மேலே கொடுக்கப்பட்டுள்ள அத்தியாயத் தலைப்பைப் பார்த்துவிட்டு மேற்கொண்டு தொடருங்கள்..

## 'நினைவாலே அணைப்பேன்..'

**கிரேஸ் சிஸ்டர்...**

நல்ல ஒரு ஆவிக்குரிய சகோதரி.. வயது 30 இருக்கும்..திருமணம் செய்து கொள்ளவில்லை..

தேவனுக்காக வைராக்கியமாய் ஊழியம் செய்யும் ஒரு சகோதரி..அடிக்கடி குறிப்பிட்ட ஒரு தீர்க்கதரிசன ஊழியர் நடத்தும் கூட்டங்களுக்கும் தீர்க்கதரிசன முகாம்களுக்கும் தவறாமல் செல்பவர்.. அவர் விரும்பிய தீர்க்கதரிசன வரமும் தந்து தேவன் அவரை உபயோகப்படுத்த ஆரம்பித்தார்..தன் வீட்டிலேயே கூட்டங்கள் நடத்த ஆரம்பிக்க, அருகிலுள்ள சகோதரிகளும் வாலிபப்பிள்ளைகளும் அவரிடம் போக ஆரம்பித்தனர்..குறிப்பாக தங்கள் காரியங்களைக் குறித்து தேவசித்தம் அறிய அக்கா தீர்க்கதரிசனம் சொல்வார்கள் என்று..

எந்தச் சபையோடும் ஐக்கியம் இல்லாமல், தன் வீட்டிலேயே கூட்டம் நடத்திக் கொண்டிருந்த அக்காவின் மனமெல்லாம் நிறைந்திருந்தது, வல்லமை தீர்க்கதரிசன முகாம்கள் நடத்திக்கொண்டிருந்த மிகப்பிரபலமான அந்த மணமாகாத வாலிப தீர்க்கதரிசி தான் !

அவரையே தன் ரோல் மாடலாய், ஆத்மார்த்த ஆன்மீக அன்பராய், நேசித்து பூஜித்து, பிரதர் என்ற நிலை மாறி, திருமணம் செய்தால் அவரைத்தான் திருமணம் செய்வேன், அவரையே கர்த்தர் எனக்குக் காட்டுகிறார் என்று அடம் பிடித்து, நித்தம் நித்தம் அவரையே நினைத்து நினைத்து ஏங்கி, கற்பனைகளிலேயே அவரோடு எல்லா வகையிலும் இருந்து, 40 வயதுக்கு மேலாகியும் அவருக்காகவே காத்திருந்து, உபவாசம் என்ற பெயரில் அவருக்காகப் பட்டினி கிடந்து, கடைசியில் ஒரு நாள் செய்தி வருகிறது..



கிரேஸ் அக்கா இறந்துட்டாங்க... !

விஷயம் இதோடு முடியவில்லை! அவரது வீட்டுக் கூட்டங்களில் கலந்து கொண்ட சில வயதுப் பிள்ளைகளுக்கும் அந்த சகோதரிக்குள்ளிருந்த வஞ்சிக்கிற ஆவி பிடித்து, கதை தொடர்கதையாகிறது !!

**பிரதர் பால்...**

நல்ல சுவிசேஷகர்..பாடகர்..அழகான மொழிபெயர்ப்பாளர்.. திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்குத் தகப்பன்.. ஆங்காங்கே சென்று நற்செய்தி ஊழியம் செய்பவர்..சொந்தமாகவே ஊழிய ஸ்தாபனம் வைத்திருப்பவர்.. ஊழியத்தினிமித்தம் அடிக்கடி வெளியூர் போவதால் குடும்பத்துக்கோ மனைவி பிள்ளைகளுக்கோ நேரம் கொடுக்க முடியாமல், தனக்கும் மனைவிக்கும் சங்கடமாகி மனவருத்தங்கள்.. பிணக்குகள்..நாளடைவில் கணவன் மனைவிக்கிடையே வெளிப்படையான சண்டை சச்சரவு..

யாரிடமும் சொல்ல முடியாமல் தவிக்கிறார்..

அங்கே அவரது ஆபீஸிலேயே, மணமாகி இளவயதில் கணவனை இழந்த ஒரு வாலிப சகோதரி.. தனது ஊழியக்காரரை சோர்ந்த முகத்தோடு அடிக்கடி பார்க்க.. அவரும் தன் மனபாரங்களை அவளிடம் இறக்கி வைக்க.. நாளடைவில் பரஸ்பர புரிந்து கொள்தல், அன்பு, பாசங்கள் பகிர்வுகள், பரிதாபங்கள், பாசப்பிணைப்பில் இறுக, இருவருக்குள்ளும் ஒருவித அன்பின் உறவு, ஆத்துமப் பிணைப்பாக உருமாறி, அது சரீர உறவு வரை போய் முடிகிறது..

ஒரு நாள் இரண்டு நாளல்ல, சில வருடங்கள் தொடர்ந்த இந்த உச்சக்கட்ட உறவில் எங்கோ ஏதோ விபரீதமாகிறது !

ஒரு நாள் புறநகர்ப் பகுதியிலுள்ள ஒரு வீட்டில் தன்னைத் தனியே சந்தித்த சகோதரர் பாலை படுக்கையிலேயே தலையணையை வைத்து முகத்தை அமுக்கி கமுக்கமாகக் கொன்று விடுகிறாள் அவருக்குக் கீழே பணிபுரிந்த சகோதரி !

'மாரடைப்பால் மரணமடைந்தார்..' என்று வெளியே சொல்லப்பட்டாலும், போஸ்ட்மார்ட்டம் செய்த கிறிஸ்தவ டாக்டர் இரகசியமாகச் சொல்லுகிறார்.. 'இது ஒரு Cold Blooded Murder..' என்று !

**டேனி அண்ணன்... 27 வயது..**

சூப்பரா பாடுவார்.. என்ன பாட்டு ! என்ன ஒர்ஷிப் ! அண்ணனோட ஆல்பமெல்லாம் ஹாட் கேக் மாதிரி சேல் ஆகும்..மைக் பிடித்தால் தேவ பிரசன்னம் அப்படியே இறங்கும் ! அண்ணன் பிரபலமாக பிரபலமாக, அண்ணனுக்கு ஆங்காங்கே கட்- அவுட், flex போர்டு என்று ஆண்டு முழுவதும் அண்ணனுக்கு ஒரே புக்கிங் தான்..

ஆரம்பத்தில் எல்லாம் அருமையாய்கத்தான் போய்க் கொண்டிருந்தது.. கொயர் ப்ராக்டிஸ் என்று வாரம் ஒரு நாளில் ஆரம்பித்து, வாரத்தில் இரண்டு நாள் மூன்று நாள் என்று நீளுகிறது.. ப்ராக்டீஸுக்கு வருகிறவர்கள் எல்லாம் தங்கச்சிமார் தான்.. நாட்கள் போகப்போக தங்கச்சிமாருக்கு ஒரே அண்ணா கனவு தான் ! கிடைச்சா அண்ணனை மாதிரி தான் கிடைக்கணும் நமக்கு வர்றவன் என்று !

'கலங்காதே மகளே!' என்று அவர் பாடும்போதெல்லாம் இயேசு கிறிஸ்து தேற்றுவது போல அல்ல.. அண்ணனே தங்களை ஆரத்தழுவுவது போலிருக்கும் அவர்களுக்கு !

நினைவெல்லாம் பேச்செல்லாம் அண்ணா தான் ! கடைசியில் பிசாசு வைத்த கண்ணியில் அண்ணன் சிக்கினாரோ, ஆராதனைக் குழுவிலுள்ள அவரது வயதில் பாதி உள்ள தங்கச்சி சிக்கினாரோ, இருவரும் திருமணம் செய்து கொள்கின்றனர்..

காலங்கள் கடந்து, சில வருடங்களில் உறவு கச்சிப்போய், இருவரும் விவாகரத்தாகி பிரிகின்றனர்.. கதை தொடர்கிறது..

விவாகரத்தான கையோடு அண்ணன் ஐம்பது வயதில் அடுத்த கலியாணமும் செய்து கொண்டு ஜாலியாக ஆராதனையில் ஜொலித்துக் கொண்டிருக்கிறார் ! இது சினிமா உலகில் அல்ல..இன்றைய ஆவிக்குரிய உலகின் நிஜக் கதை !!



Chapter 02

பகுதி – 4

# ‘கனவுத் தொழிற்சாலை’

**யோ**சேப்பைத் தன்னோடு சயனிக்கும்படி நித்தம் நித்தம் அவனை அலட்டி வலுக்கட்டாயப்படுத்துவதற்கு முன்பாக வேதம் சொல்கிறது.. போத்திபாரின் மனைவி அவன் மேல் ‘கண்போட்டு..’ என்று..

காரணம், அவன் ‘அழகான ரூபமும் சௌந்தர்ய முகமும்..’ உள்ளவனாயிருந்தான். ஏதோ எப்போதோ பார்த்துவிட்டு, அவனிடம் தன் மனதைப் பறிகொடுத்து புத்தி பேதலித்துப் போய்விடவில்லை அவள்.. அவள் அவனை நன்றாகவே பார்த்தாள்..வைத்த கண் வாங்காமல் அவ்வப்போது பார்த்துக்கொண்டே இருந்தாள்.. அவனது வயது.. ஆஜானுபாகுவான தோற்றம்.. உடல் புஷ்டி.. நம்ம பாஷையில Six packs.. அவனது முக அழகு.. பார்க்கப் பார்க்க கொஞ்சம் கொஞ்சமாய் அவளுக்குள் ஏதோ ஒன்று உருவெடுக்க ஆரம்பித்தது..

அவள் ஒரு தேவனை அறியாத அவிசுவாசியாய் இருந்தபடியால் அவளது ஆசை விருப்பங்கள் மற்றும் கற்பனையின் கனவுகளுக்கு எந்த முட்டுக்கட்டையும் போடாமல், மனம் போன போக்கில் மிதந்து, தன் நினைவுகளின் நிறங்களிலே உலா வந்து கொண்டிருந்தாள்.. ஆனால் விசுவாசிகளான நாம், நம் நினைவுகள், கற்பனைக் கனவுகளை வைத்து என்ன செய்து கொண்டிருக்கிறோம் ? திரும்பத் திரும்ப யார் மேலோ எதின் மீதோ அடிக்கடி வந்து வந்து அலைமோதும் எண்ண அலைகளைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள் ? அவைகளால் நமக்குள் சில வேளைகளில் எழும்பும் விரும்பத்தகாத உணர்ச்சிகளும், அந்த உணர்ச்சிகளின் உந்துதலால் நாம் செய்யும் காரியங்கள் நமக்கும் மற்றவர்களுக்கும் பாதகமாகவும் பரிசுத்த குலைச்சலாகவும் வந்து முடிகிறது..

இந்த அத்தியாயத்தில், நினைவுகள் மற்றும் கற்பனைகளின் தொடர்ச்சியின் இறுதியில் முடியும் கிரியைகளைக் குறித்து அல்ல, ஒழுக்கக் குலைச்சலின் முதல் படியான நினைவுகளின் கற்பனை உலகான எண்ணங்களின் அபாயங்களையும், அந்தக் கனவுத் தொழிற்சாலை, ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் என்னென்ன சீர்கேடுகளை உற்பத்தி செய்கிறது என்பதைப் பார்க்கப் போகிறோம்..

நாம் ஒவ்வொருவரும் நமக்குள்ளே நேர்மையாகவும் மிகவும் சீரியஸாகவும் கேட்க வேண்டிய ஒரு கேள்வி.. 'என் நினைவுகளில் ஓடிக்கொண்டிருப்பவை என்னென்ன ?' வேதம் சொல்கிறது.. 'நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்..'(ரோ 12:2)

உங்கள் மனமும் நினைவுகளும் புதிதாக வேண்டுமானால், முதலில் உங்கள் 'பெலவீனப் பகுதி' எது என்று கண்டுபிடியுங்கள். எது உங்களைத் திரும்பத் திரும்ப ஏதோ ஒன்றைப் பார்க்கத் தூண்டுகிறது ? எதைக் காண உங்கள் கண்கள் தானாகவே திரும்புகின்றன? எதை மேய கண்கள் நாலாபக்கமும் அலைபாய்கிறது ?

எப்படிப்பட்ட எண்ணங்கள் உங்களைத் திரும்பத் திரும்ப உள்ளுக்குள்ளேயே மகிழ வைத்து, அதில் நீங்கள் மூழ்கித் திளைக்க வைக்க முயற்சிக்கின்றன ? உங்களைத் திரும்பிப் பார்க்க வைக்கும் அட்வர்ட்டைஸமன்ட் போர்டு எது ? நீங்கள் டிவியில் அடிக்கடி பார்க்க விரும்பும் விளம்பரம் எது ? எப்படிப்பட்ட முகம் உங்களை வசீகரிக்கிறது ? நீங்கள் திரும்ப திரும்ப கேட்க விரும்பும் குரல்களையும், ராகங்களையும், நீங்கள் விரும்பும் பாடல்களையும் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள் ! ஆளைப் பார்த்திராமலே ஏதோ ஒரு குரல் உங்களை ஈர்க்கிறதா ? திரும்பத் திரும்ப அதைக் கேட்க வேண்டும் என்பது போல ஒரு ஆசை உள்ளே எழும்புகிறதா ? குறிப்பிட்ட ஒரு நபரின் இனிமையான குரல் உங்கள் காதுகளில் அடிக்கடி ரீங்காரமிடுகிறதா ?

டிவியில் வரும் விளம்பரங்கள் ! இன்ட்டெர்நெட்டில் ஈ மெயிலில், You Dubeல் ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள்.. அங்கே இடையிடையே தேவையில்லாமல் வரும் விளம்பரங்களும் யார் யாரோ சம்பந்தமே இல்லாதவர்களும் !

சரி.. நாங்கள் எல்லாம் விசுவாசிகளாக்கும்.. சினிமாவெல்லாம் பார்க்க மாட்டோம்.. ஆனால் 'பாட்டுக்குப் பாட்டு..' Indian Idol, You Dube மற்றும் சீரியல்கள் மட்டும் பார்ப்போம் என்கிறீர்களா ?

இதெல்லாம் பார்த்து விட்டு ஜெபம் பண்ண உட்கார்ந்து பார்! அதில் பாடும் பிள்ளைகளும் பாடல்களும் குரல்களும் முகங்களும் உன் முன்னே திரும்பத் திரும்ப வந்து, உன் காதுகளில் அந்தப் பாடல் சத்தம் ரீங்காரமிடுகிறதா இல்லையா பார் !

தெலீலாள் சிம்சோனை தினம் தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி, அவன், தான் செத்துப் போனால் நல்லது என்று நினைக்குமளவுக்கு அவனை அலட்டி அலட்டி திரும்பத் திரும்ப அவனிடம் கேட்ட ஒரே கேள்வி இது தான் !

‘உன் மகா பெலம் எதிலே உண்டாயிருக்கிறது ?’ உன்னைக் கட்டி சிறுமைப்படுத்த உன் பெலவீனம் எதிலே இருக்கிறது ? (நியா 5:6)

மேலே கொடுத்த செக் லிஸ்ட்டைக் கையில் எடுத்துக் கொண்டு, கொஞ்சம் தனியே எழுந்து வெளியே போய் உங்கள் பெலவீனம் எதிலே என்று உங்களையே செக் பண்ணிப் பாருங்கள் !

விழுதல், விழிகளில் விழத்துவங்கி, இதயத்தில் நுழைந்து, நினைவுகளோடு பிணைந்து, உயிரோடு கலந்து கடைசியில் உயிரையே குடித்து விடுகிறது ! இப்படிப்பட்ட நினைவுச் சக்கரங்களுக்குள்ளிருந்து தப்பிப் பிழைத்து எப்படி வெளிவருவது என்று பவுல் ஒரு அழகான வழியைச் சொல்லிக் கொடுக்கிறார்..

**‘கடைசியாக சகோதரரே !**
**உண்மையுள்ளவைகள் எவைகளோ,**
**ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ,**
**கற்புள்ளவைகள் எவைகளோ,**
**அன்புள்ளவைகள் எவைகளோ,**
**நற்கீத்தியுள்ளவைகள் எவைகளோ,**
**புண்ணியம் எதுவோ புகழ் எதுவோ**
**அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்!**
**(பிலி4:8)**

Chapter 02

பகுதி – 5

# ‘WINDOWS’

ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் ! உங்கள் சிந்தனை தான் உங்கள் எல்லாமே ! உங்களையும் கர்த்தரையும் தவிர உண்மையிலே உங்கள் சிந்தனைகளில் உழன்று கொண்டிருப்பவைகளை யாரும் அறிய வாய்ப்பில்லை.

தேவனுடைய உதவியினாலே உங்கள் ஆகாத நோக்கத்தையும் சிந்தனைகளையும் உங்கள் நெஞ்சை விட்டு அகற்றி, உங்கள் எண்ணங்களை அவரை நோக்கி நீங்கள் நேராக்காவிட்டால், உங்களுக்காக அந்த வேலையை வேறு யாரும் செய்யவே முடியாது.

இன்றைய சமுதாயத்தில், ஒவ்வொரு நாளும் நினைவுகளுக்கடுத்த இந்த யுத்தமும் எண்ணங்களின் போராட்டமும் நாளுக்கு நாள் வலுத்துக் கொண்டே இருக்கிறது. நம்முடைய முழு தலைமுறையே மாம்ச சரீர இச்சைகளைத் தூண்டும் நாட்டங்களை நாடித் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருப்பது போலிருக்கிறது..

மட்டுமல்ல, இந்தக் கண்களின் இச்சை, செவிகளின் இச்சை, மாம்சத்தின் இச்சையை முழுவதுமாய் தவிர்ப்பது என்பதே நடக்காத காரியம் போலத் தெரிகிறது.. வீட்டை விட்டு வெளியே போக வேண்டிய அவசியமே இல்லை..இந்த மாதிரி சமாச்சாரங்கள் இருந்த இடத்திலே எப்படி வருகிறது பாருங்கள் ! எந்தக் காலத்திலோ யோவேல் தீர்க்கதரிசி நம்முடைய இந்த நாளை தீர்ககதரிசனமாய்க் கண்டு சொல்லி விட்டார் ! அவர் வாயில் சர்க்கரை போட வேண்டும் !

கொஞ்சம் யோவேல் 2:5-9 ஐ பாருங்கள் !

‘அவைகள் பராக்கிரமசாலிகளைப் போல ஓடும்..யுத்த வீரரைப் போல மதிலேறும்..வரிசைகள் பிசகாமல் ஒவ்வொன்றும் தன் தன் அணியிலே செல்லும்.. அவைகள் பட்டணங்கள் எங்கும் செல்லும்..மதிலின் மேல் ஓடும்..வீடுகள் மேல் ஏறும்.. (எத்தனை உயர sky scrapper அப்பார்ட்மென்ட் ஆனாலும் அடுக்குமாடிக் கட்டடங்கள் ஆனாலும் சரி..பலகணி வழியாய்த் திருடனைப் போல உள்ளே நுழையும் )

**Cable connection** என்ற ரூபத்தில் எத்தனை உயர மாடியானாலும் மதில் ஏறி நம் டிவி பெட்டிகளுக்குள்ளும், ‘**windows**’என்ற பெயரில் நம் வீட்டு **window** வழியாக நம் பெட்ரூம் வரையில் நம் சிஸ்டத்துக்குள்ளும் நுழைந்த காலம் போய், ‘இப்போது கேபிளே தேவையில்லை, நாங்கள் **wi-fi** என்ற பெயரில் காற்றோடு காற்றாய் உங்கள் வீட்டு மூச்சிலே ஒன்றரக் கலந்து, உங்களுடைய மற்றதெல்லாம் நாங்களே பார்த்துக் கொள்வோம்’ என்று சிரித்துக் கொண்டே சொல்கிறது !

கொஞ்சம் நீதிமொழிகளைப் பாருங்கள் ! (7 : 6-12)

வீட்டின் ஜன்னலருகே நின்று பலகணி வழியாய் மேலே சென்று காற்று வாங்க உப்பரிகையில் நின்றால் (மொட்டை மாடியில் ??) அங்கேயும் காத்திருக்கும் ! சரி, வீட்டுக்குள் தான் விரட்டி அடிக்கிறது என்று வீட்டை விட்டு வெளியே இறங்குங்கள் ! அங்கே வீட்டு வாசலிலே பாவம் படுத்திருக்கும் ! (ஆதி 4:7)

அதையும் தாண்டி வெளியே இறங்கினால் வெளியே நின்று கொண்டிருக்கும் ! சில வேளை வீதியிலிருக்கும் ! சந்துகள் தோறும் உனக்காகப் பதிவிருக்கும் !

பஸ்ஸில் போனாலும், ட்ரெயினில் போனாலும், ஆட்டோவில் போனாலும், பைக்கில் போனாலும், சிக்னலில் நின்றாலும், ஆபீஸுக்குள் போனாலும், காபி பிரேக்கிலும் லஞ்ச் பிரேக்கிலும் மாலை மயங்கும் அஸ்தமன நேரத்திலும், இரவின் இருண்ட அந்தகார நேரத்திலும் இது தந்திரமாய் உனக்கு எதிர்ப்பட்ட நாட்கள் போய் இப்போது நேராகவே உனக்கு மல்லுக்கு நிற்கிறது ! (நீதி 7:6-12)





சரி, ஆறு நாளும் தான் இந்தப்பாடு என்று ஏழாம் நாளையாவது ஓய்வு நாளாய் பரிசுத்தமாய் ஆசரிக்கலாம்என்று ஆலயத்துக்கு வந்தால், 'கடவுளே ! இங்குமா ?' என்று அங்குள்ள நிலை எசேக்கியேலின் வார்த்தைகள் மேல் அப்படியே வெளிச்சம் போடுவது போலிருக்கிறது ! மனுபுத்திரனே ! அவர்கள் செய்கிறதைக் காண்கிறாயா ? என் பரிசுத்த ஸ்தலத்தை விட்டு என்னை தூரமாய்ப் போகப் பண்ணும்படியான மிகுந்த அருவருப்புகளைக் காண்கிறாய் அல்லவா ? இதிலும் அதிக அருவருப்புகளை இன்னும் காண்பாய்..' என்று எசேக்கியேலில் எப்போதோ படித்த ஞாபகம் வருகிறதா ? ( எசேக் 8: 6-9, 13-15)

சரி.. இதைவிட்டு தப்பிக்கும் வழியைப் பார்ப்போம் ! இங்கு தான் நம்மையே அக்குவேறு ஆணி வேறாய்ப் பிரித்துப் போட்டு நம்மையே அச்சுப் பிசகாமல் நுணுக்கமாய் ஆராயும் வேலை துவங்குகிறது..

சிந்தனை மண்டலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கையும் சந்து பொந்துகளையும் அலசிப் பார்த்தபின், ஆங்காங்கே வடிகட்டும் தடைச்சுவர்களை எழுப்பு! உன் பெலவீனம் எங்கே என்றும், எதிலே நீ அடிக்கடி தடுக்கி விழுகிறாய் என்றும் கண்டுபிடித்தபின் - அது எது என்று உனக்கு நன்றாகவே தெரியும் - தலையே போனாலும் அந்த இடத்தையும் அந்த நபரையும் சூழ்நிலையையும் கட்டாயமாய்த் தவிர்த்துவிடு !

ஒரு குறிப்பிட்ட நபரை நினைத்தவுடன் அல்லது பார்த்தவுடன் பரிசுத்தமற்ற கேள்விக்குரிய தெய்வீகமில்லாத உணர்வுகள் உனக்குள் எழும்புமானால், அவர் மணமானவரோ, ஆகாதவரோ, நீ மணமானவனோ, வாலிபனோ, அவரைச் சுற்றின அல்லது அவளைச் சுற்றின எண்ணங்களைத் தூண்டும் காரியங்களுக்கு இடம் கொடாதே !

ஆபீஸில் தினமும் சந்தித்தே ஆக வேண்டிய நபராய் இருந்தால், சந்திக்கும் போதெல்லாம் ஏதோ ஒரு கிளர்ச்சி ஏற்பட்டால், அந்த இடத்தை விட்டு ஓடி ஒதுங்கு ! அந்த நபரோடு நெருங்கவே நெருங்காதே !

தன் வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக் கொள்ளக்கூடுமோ ? தன் கால் சுடாமல் எவனாவது தழலின் மேல் நடக்கக்கூடுமோ ? (நீதி 6: 27,28)

யாரைப் பற்றிய எண்ணமாவது உன்னைத் திரும்பத் திரும்ப தொந்தரவு செய்யுமானால், கூடுமானவரை எவ்வளவு தூரம் சந்திப்புகளை தவிர்த்து அவர்களைப் பார்க்காமலே தூரமாய் இருப்பாயோ அவ்வளவு நல்லது ! ஆத்துமாவைப் பறி கொடுப்பதைப் பார்க்கிலும் வேலையைப் பறிகொடுப்பது எவ்வளவோ மேல் !

'அங்கி போனால் என்ன, எனக்குள்ளிருக்கும் ஒளி
மங்கிப் போக அனுமதியேன் !

'போத்திபார் மனைவியிடம் அங்கியை விட்டு விட்டு மின்னலாய் ஓடி மறைந்தான் யோசேப்பு !' என்று அழகாய் சிலவரிச் செய்தியில் எழுதினார் சகோ. விஜய்..

எண்ணங்களில் உதிப்பவைகளையும், அவ்வப்போது வந்து போகிறவைகளையும் 'சே ! இதிலென்ன இருக்குது ?' என்று விட்டு விட்டால், 'அதில் தான் எல்லாம் இருக்கிறது..' என்று அது உன்னை அடித்து விளங்க வைக்கும்.. காரணம், ஒழுக்குக் குலைச்சலுக்கு நேரே இட்டுச் செல்லும் நீண்ட தொடர் காரியங்களுக்கு ஆரம்பமே, மண்டைக்குள் ஓடும் இந்த 'மண்டைக் கோளாறு' தான் ! இந்த நினைவுகளின் லெவலில் தான் கூடிய சீக்கிரமே மாற்றங்களைச் செய்து விடும் எல்லா சாத்தியங்களும் உண்டு !

ஏனென்றால் இந்த நிலையில் தான் 'சீ போ !' என்று தூக்கி எறியும் சக்தியும், 'எண்ணங்களில் எழும்புகிற எல்லா இச்சையின் மேட்டிமைகளையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்தும்' கட்டுப்பாடும் நம் கைக்குள் உண்டு! இதில் தவறினால் இதற்கடுத்து வரும் ஒவ்வொரு கட்டமும் சறுக்கலும் வழுக்கலும் தான் ! பிழைகளில் ஆரம்பித்து.. மறைவான குற்றங்களில் மறைந்து, மறைத்து..துணியில்லாத துணிகரமான பாவங்களில் விழுந்து.. கடைசியாக பெரும் பாதகத்தில் போய் முடியும்..' (சங் 19: 12,13) என்று சங்கீதக்காரன் தன் அனுபவத்திலிருந்து சொன்னான்.

எண்ணங்களிலும் அதற்கடுத்த கட்டங்களிலும் 'பாவம்' போல் காணப்படும் இந்தப் பாவம் வடிகட்டப்பட்டு, அதற்கு முடிவு கட்டாமல் போனால், அது நம்மையே கட்டி, அடுத்த கட்டத்தில் கைமீறி கடைசியில் எல்லை மீறிப் போய், போனால் திரும்பியே வரமுடியாத இடத்துக்குக் கொண்டு போய் விட்டுவிடும் !

நினைவுகளின் அடுத்த கட்டம் - 'உணர்ச்சிகள் !'

Chapter 02

பகுதி – 6

# தொடு தூரம்

**பா**லுணர்வுகளுக்கு, தொடுதல் தேவை என்பது அவசியமில்லை :

‘ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிறவன் எவனும்’ என்றார் இயேசு. இச்சையோடு பார்ப்பது என்பது கண்களால் மட்டுமல்ல, நினைவுகளாலும் கற்பனைகளாலும் பார்ப்பதையும் ரசிப்பதையும் உள்ளடக்கியது. புறக்கண்களால் மட்டுமல்ல, அகக்கண்களால் ரசிப்பதும் ஆபத்தானதே!

கிறிஸ்தவர்களாகிய நாம் அநேக வேளைகளில் பாலுறவுகளை சரீரத்தோடு மட்டுமே சம்பந்தப்படுத்திப் பார்க்கிறோம். ஆகவே தான் சரீரப்பிரகாரமாக எந்தத் தவறும் நடக்காதவரை பாலியல் பாவம் எதுவும் நடந்து விடவில்லை என்று சொல்கிறோம்.

உலகத்தாரைப் பொறுத்தவரை அவர்கள் பாலியல் பாவத்தில் விழ அதிக நேரம் ஆவதில்லை. காரணம், தங்கள் நினைவலைகளிலேயே அதிகக் காலம் அவர்கள் மூழ்கிக்கிடப்பதில்லை. மனங்கள் இரண்டு ஒன்றானபின் உடல்கள் இணைவதில் அவர்களுக்குத் தடையேதும் இருப்பதில்லை. ஆனால் ஆவிக்குரியவர்களுக்கு இப்படிப்பட்ட காரியங்களுக்குத் தடைகள் ஏராளம். முதலாவது ‘பாவம் செய்துவிடக் கூடாதே’ என்ற தெய்வ பயம். இரண்டாவது கர்த்தருடைய வசனத்தின் எல்கைக்குள் இருக்க வேண்டிய பயம், சபையில் மற்றவர்கள் மத்தியில், அவர்கள் கண்களுக்கு முன்பாக இருக்கிறோம் என்னும் பயம், பெற்றோருக்கும் கணவன்- மனைவிக்கும் பயப்படும் பயம் ஆகிய பல வித பயங்களுக்கு மத்தியில் தொடுதலோ, சரீர இசைவோ ஏற்பட வாய்ப்பு இல்லாத நிலையில், தாங்கள் இன்னும் கீழ்ப்படிதலின் பாதையில் தான் இருக்கிறோம் என்னும் பெருமிதத்தில் இருந்தாலும், கற்பனை உலகம் என்னும் கருகலான பகுதியில் நீண்ட காலம் அவர்கள் உலா வரும்போது, ’சில நாள் சென்றபின்,’ (ஆதி 39 : 7) அல்லது ’பின்பு சமயம் வாய்த்தது’ என்று வேதம் சில இடங்களில் குறிப்பிடுகிறபடி அப்படிப்பட்ட சமய சந்தர்ப்பங்கள் சடுதியாக வந்து சேரும்போது மனமானது இதமியப்பட்டு, சரீரம் தன் கட்டுப்பாட்டை இழந்து, அங்கே பாவம் சம்பவித்துவிடுகிறது.

**Hugging என்ற அன்பின் அணைப்பு :**

இதிலென்ன இருக்கிறது' என்ற ஒன்றுமில்லாமல் தோன்றும் மிகச்சாதாரணமான, இயல்பான, அன்பான ஒரு முத்தமோ, **Hugging** என்ற அன்பான அணைப்போ, கை பற்றி நடப்பதோ, தொட்டுப் பேசுவதோ, அடித்துப் பேசுவதோ இன்னும் இது போன்ற சாதாரணமாய்த் தோன்றும் காரியங்கள் கூட படிப்படியாக வேறு எதிலோ கொண்டு போய் விடும் அபாயம் உண்டு.

'சாப்பிடீங்களா சிஸ்டர் / பிரதர்' என்று இயல்பாக ஆரம்பித்து, உரையாடல்கள் நீண்டு, பிரச்சனைகளைப் பகிர்ந்து கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாய் மறுபாலாரோடு செலவு செய்யும் நேரங்கள் நீண்டு, கடைசியில் வேறு மாதிரி முடிவுகள் எழுதப்படும் வாழ்க்கைகள் எத்தனை எத்தனையோ. !



நன்றி: **"THE SNARE "**
**LOIS MOWDAY RABEY**



# Chapter 03

பகுதி – 1

## இம்மட்டும் வா ! மிஞ்சி வராதே !

**(யோபு 38:11)**

### பாலியல் பண்பாட்டுக்கு எல்லை குறித்தல்

- உலகம் முழுவதும் பாலியல் ஒழுக்கக்கேடு இன்று தறிகெட்டுப் போய்த் தலைவிரித்தாடுகிறது.

- 'விபச்சாரம்' என்ற சொல்லே அபச்சாரமாகி 'இதெல்லாம் ஒன்றுமில்லை' என்று தங்களை தேவ மனிதர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் கூட சேர்ந்து கூத்தடிக்கும் நாட்கள் இவை.. விதிவிலக்கே இல்லாமல் திருமணமான பெண்களும் இதில் அடக்கம் என்பது தான் அபத்தம். கள்ளக் காதல்களும் உணர்ச்சிப் பெருக்கெடுத்த உறவுகளும் காலத்தின் கட்டாயமாகிப் போன காலமிது !

- பாலியல் இச்சைகளுக்கு விலகியோடி உடலளவில் பரிசுத்தமாய் இருப்பது என்பதெல்லாம் பாட்டி கதையாய்ப் போன நிலை இன்று !

☹ எல்லையே இல்லாத அளவு எல்லை மீறியிருக்கிறது ஒழுக்கக்கேடு. 4, 5 வயது குழந்தைகள் கூட தங்களுக்குள் சரீர உறவு வைத்துக்கொள்வதெல்லாம் ஒன்றும் புதுசு அல்ல என்று சொல்லும் அளவுக்கு அசுர வேகத்தில் தீயாய்ப் பரவுகிறது இந்தப் பாழாய்ப்போன பாலுறவு.

☹ ஜனங்கள் இந்தப் பாவத்தில் செங்குத்தாய்த் தலைகுப்புற விழக் காரணமாய் இருப்பவைகளில் ஒன்று.. 'அதெல்லாம் ஒண்ணும் ஆகாது..' என்ற ஓவர் கான்ஃபிடன்ஸ்..

☹ 'பொண்ணோட சுத்தினா என்ன என்றும், 'அவன் என் friend தான ?...' இதிலெல்லாம் ஒண்ணும் இல்லப்பா..' என்ற தெனாவெட்டு ஒன்றே போதும் உன்னைக் கவிழ்க்க !

☹ தேசத்துப் பெண்களைப் பார்க்கத்தான் புறப்பட்டுப் போனாள் தீனாள். ஆனால் பட்டதோ ஊர்த் தலைவனின் மகன் சீகேமின் கண்களில்.. அதன் பின் நடந்தவைகளையும் சங்கிலித் தொடரான கொலைகளையும் எந்தக் கணக்கில் சேர்ப்பது ?

☹ 'இதப் பாக்கிறதுல என்ன இருக்குது?' என்று இறங்குவது சர்வநாசத்தில் முடியும். ஜாக்கிரதை !

☹ நீ வேறு எதையோ பார்க்கப் போக, வேறு ஏதோ உன் கண்ணில் படுவதுமல்லாமல், எத்தனை கண்கள் நீ அறியாமலேயே உன்னைப் பார்க்கிறது என்றும் உனக்குத் தெரியுமோ ?

☹ நீ மணமானவனோ வாலிபனோ, இந்தக் கடைசிக் காலத்தில் பாலியல் விஷயத்தில் பரிசுத்தத்தைப் பாதுகாத்துக் கொள்ள நீ விரும்பினால், நீ செய்ய வேண்டிய காரியங்களில் மிக முக்கியமான ஒன்று, உனக்கென்று கடுமையான எல்லை விதிளை நிர்ணயித்துக் கொள்வது..

☹ நீ உன் மறுபாலாரைக் குறித்து.. 'அட போய்யா..' என்று கவலையே இல்லாமல் இருப்பாயானால், உனக்கு 'அய்யோ ' தான்! இது சத்தியம் ! சத்தியம் ! சத்தியம் !

- ☹ எவ்வளவு சீக்கிரம் நீ இதை உணர்ந்து புரிந்து சுதாரித்துக் கொண்டு உன்னைச் சுற்றி நீயே வேலியடைத்துக் கொள்வாயோ அவ்வளவு உனக்கு நல்லது !

- ☹ ‘பொண்ணோடேயோ பையனோடேயோ ஜாலியா சுற்றிக் கொண்டே...’அப்படியெல்லாம் நடக்காம பாத்துக்குவேன்..’ என்றெல்லாம் டயலாக் அடிப்பவர்கள் சீக்கிரம் விழப்போகிறார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

- ☹ எல்லைக் கோட்டைக் குறித்துக்கொள்! அடைப்பைப் பிடுங்குகிறவனைப் பாம்பு கடிக்கும் என்று ஞானமாய் எழுதி வைத்தான் சாலமோன் - அனுபவத்தோடு..

- ☹ அடைப்பைப் பிடுங்குபவனுக்கே அந்த நிலை என்றால் அடைப்பே இல்லாதவனின் நிலை என்ன ?

- ☹ சிலரோடு நீ நட்பு வைத்துக் கொள்ளவே முடியாது. பெட்டர் உன் ஆவிக்குரிய தரத்தை நீ உயர்த்திக்கொள்!

- ☹ நண்பர்கள் வட்டத்திலிருந்து நீ விலகுகிறாய் என்று உன்னைக் கிண்டலடிப்பவர்கள் அடிக்கட்டும். நீ அடைய வேண்டிய இலக்கும், போய்ச்சேர வேண்டிய ஸ்தானம் ஒன்றும் உண்டு என்பதை எப்போதும் ஞாபகம் வைத்துக்கொள் !

- ☹ பொய் பித்தலாட்டம் பண்ணுகிறவன், கேலி கிண்டலிலேயே காலத்தைக் கழிக்கிறவன், திருக்கும் கருக்குமான பெண்கள் - நண்பிகள் - இவங்க வாசமும் சகவாசமுமே வேண்டாம் என்பதை உன் வாழ்க்கையின் நடைமுறைச் சட்டமாகவே ஆக்கிக் கொள் !
இவர்கள் உன் வாழ்க்கையை நரகமாக்கி விடுவார்கள் ஜாக்கிரதை !

- ☹ லிவ் -இன் பார்ட்னர்ஸ் - பச்சையான இச்சைக்கு இவர்கள் வைத்துக் கொள்ளும் கொச்சையான பெயர் ! விலகி ஓடு !

- ☹ சும்மா தொட்டுத் தொட்டுப் பேசுவதையும், பாசமாய்க் கட்டிப் பிடித்துக் கொஞ்சுவதையும் தவிர்த்துவிடு ! தள்ளியே நில் !

- ‘சேட்டிங்கில்’ (chatting) சேட்டை பண்ணுகிறவர்களைக் கவனமாய்க் கண்காணி ! எவ்வளவு தான் அவர்கள் அன்பாய் ஒழுகினாலும், அவர்களது செய்திகளில் பாசம் புரண்டோடினாலும் - மெசேஜ் அனுப்புகிறவர்களை எச்சரி! கேட்காவிட்டால் ப்ளாக் பண்ணி விடு! அட்லீஸ்ட் உன் ஆத்துமாவையாவது தப்புவிப்பாய் !

- பாசம் ரொம்பவே இருக்குமானால், அதைக் கட்டியணைத்துத் தான் காட்டவேண்டுமென்று விரும்பினால் கணவன்-மனைவி தங்களுக்குள் பாகுபாடின்றி மறைவிடங்களில் அதை வெளிப்படுத்திக் கொள்ளட்டும் !

- உன் ‘ஆரத்தழுவும்’ அபிஷேகம் பெண்களுக்காக மட்டுமே இருக்குமானால் அது நமக்குத் தேவையில்லை !

- உன் சொந்தக் குடும்பத்தினரும், ஒரே பாலாரும் தவிர வேறு யாரும் உன்னைச் செல்லமா ‘செல்லமே’ என்று செல்லப் பெயரிட்டுக் கூப்பிட அனுமதிக்காதே ! செல்லப் பெயர்கள் செல்லமாய் மாறி மருவி வேறு வினையில் முடியும். இது வரை தெரியாவிட்டால் இப்போதாவது தெரிந்துகொள்!

- கவரப்படுதலைக் குறித்துக் கவனமாயிரு ! மறுபாலாரோடு எப்போதும் ஒட்டிக் கொண்டு அவர்களையே சுற்றி சுற்றி வராதே !

- ஆணோ பெண்ணோ அவர்கள் எப்போதும் உன்னைப் பார்த்துக் கொண்டோ, ரசித்துக் கொண்டோ இருந்தால் அந்த ஆளை விட்டும் இடத்தை விட்டும் உடனடியாக நகர்ந்துவிடு !

- யாராவது உன் உடல் வாகையும் முக அழகையும் நிறத்தையும் குரலையும், ஏன், ஆவிக்குரிய வரங்களையுமே குறித்து எப்போதும் ரசித்துக் கொண்டும் பேசிக்கொண்டுமே இருந்தால், அவர்கள் உன்னிடம் வசீகரிக்கப்பட்டு வசப்பட்டுக் கொண்டிருக்கிறனர் என்று அர்த்தம். யோசேப்பைப் போலத் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று ஓடிப்போனாலும் தப்பில்லை..தப்பித்துக் கொள்வாய் !

- ☹ யாரைப் பார்த்து நீ எப்போது எப்படி வசீகரிக்கப்படுகிறாய் என்பது உனக்கே தெரியும்.

- ☹ உணர்த்தப்படும் போது நழுவித் தப்பித்துக்கொள். ஒரு சிலரோடு நம் ஆவி ஒத்துப்போவது இயற்கை.

- ☹ உலகத்திலேயே மிகப்பெரிய மனிதனையோ, உலக அழகியைக் காட்டிலும் அழகானவளையோ கூட நீ மணந்திருந்தாலும், இன்னும் யாரோ ஒருவர் மேல் உன் மனம் இதமாக இதமியப்பட்டு இழுக்கப்படுவதிலிருந்து உன்னை நீயாகவே கடிவாளம் போட்டு நிறுத்துவது கடினம் என்பது நிர்த்தாட்சண்யமான உண்மை. தலை கீழாய் நின்றாலும் அதை நீ தான் செய்தாக வேண்டும் !

- ☹ யாரோ ஒரு பெண்ணையோ ஆணையோ நினைத்த மாத்திரத்திலேயே உனக்குள் ஒருவித கிளர்ச்சியும் இனம் புரியாத மிதப்பும் உண்டாகுமானால், உன் தலைக்குள் சிவப்பு விளக்கு எரிகிறது என்று அர்த்தம்...ஜாக்கிரதை !

- ☹ புதுப்புது உறவுகளைத் தேடி ஓடாதே! புதிதாக யாரோ ஒருவர் உன் வாழ்வில் நுழைவாரானால், முதலில் அவரை நன்கு படி ! அவரை அறிந்து புரிய போதுமான நேரம் எடுத்துக்கொள்!

- ☹ வாழ்க்கையில் பெரிய நோக்கத்தோடு வாழ விரும்பும் உனக்கும் அவர்களது சிந்தனைக்கும் ஒத்துப்போகுமா என்று யோசி. முதிர்ந்த தேவ மனிதர்களிடம் ஆலோசனை கேள்! ஒத்துவராவிட்டால் கைகழுவி விடு !

- ☹ தலைமைத்துவம் எல்லாத் தரப்பினரையும் கவர்ந்திழுக்கும் ஒன்று. வரமும் தாலந்தும் அறிவும் புத்திக்கூர்மையும் சுண்டியிழுக்கும் தன்மையும் ஒருங்கே பெற்ற ஆவிக்குரிய தலைவனாய் நீ இருந்தால், எதிர்பாலார் உன்னிடம் அதிகபட்ச விருப்பத்தோடு ஈர்க்கப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

- ☹ அப்படியிருக்கும் பட்சத்தில், உனது நெருங்கிய வட்டத்துக்குள் யாரை நீ விரும்பி அனுமதிக்கிறாய் என்பதில் எச்சரிக்கையாய் இரு !

😟 கொள்ளைப் பொருளைக் கண்டது போல இலவசமாய்க் கிடைக்கப்பெறும் வெகுமதிகளைக் கண்டு பறக்காதே!

😟 தங்கள் நேரத்தையும் பணத்தையும் பெண்களின் மேல் தண்ணீராய்ச் செலவழிக்க ஆண்கள் ஒருபோதும் முட்டாள்கள் அல்ல..

😟 நீ ஒரு பெண்ணாய் இருந்தால், ஆண் ஒருவன் உன் மீது தன் நேரத்தையும் பணத்தையும் கணக்கே பாராமல் கொட்டுகிறான் என்றால், ஒரு நாள் தன் உடல் சுகத்தைத் தீர்த்துக் கொள்ள அவன் உன்னை அழைப்பான் ! இது உண்மை !

😟 பணத்துக்காக யாரிடமாவது தொங்கிக் கொண்டிராதே ! உன் இரண்டு கைகளால் உழைத்துச் சம்பாதி! அதற்காகவே பெண்களை மதித்து கனப்படுத்தும் ஆண்கள் உண்டு.

😟 திருமண உறவில் சிக்கல் இருந்தால் உடனே சரி செய்துவிடு. பிரச்சனையை சீக்கிரத்தில் தீர்க்காவிட்டால், நீ இழந்த அமைதியையோ வேறு எதையோ, திருமணத்துக்கு வெளியே யாரோ ஒருவரிடத்தில் நீ தேடுவாய். அது கடைசியில் விபச்சாரத்திலே போய் முடியும்.

😟 'நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்' என்று இயேசு சொன்னார். ஆகவே ஜெபத்தோடும் எப்போதும் விழிப்போடும் இரு !

இருட்டறையில் மறுபாலாரோடு தனியே இருக்காதே!

😟 தனி அறையில் படுக்கை மேல் உட்கார்ந்து கொண்டோ, சாய்ந்து கொண்டோ தனிமையில் மறுபாலாருக்கு ஆலோசனை கொடுக்கிறேன் பேர்வழி என்று இல்லாத வேலையெல்லாம் செய்யாதே !

😟 மற்றவர்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் ஆடைகள் அணிவதைத் தவிர்த்துவிடு. உனக்கு எது தகுதியாய் இருக்கும் என்பதை உன் கணவனோ மனைவியோ சொல்ல அவர்களுக்கு எல்லா உரிமையும் அதிகாரமும் உண்டு. அதற்கு இடம் கொடு.

☹ அடுத்த பாலாரைப் பார்க்கத் தனியாகப் போகாதே! தேவையில்லாத பிரச்சனை அது !

☹ சமூக வலை தளங்களில் நீ பதிவிடும் உன் போட்டோக்களைக் குறித்து கவனமாயிரு. எதிர்பாலாரின் கவனத்தை அதிகமாய் கவர்ந்து அதிக ‘லைக்’ பெறும் தேவையற்ற போட்டோக்களை டெலிட் பண்ணிவிடு! (எல்லாம் உன் நல்லதுக்குத் தான்..)

☹ இந்த 21ம் நூற்றாண்டில் பாலுறவு விஷயங்களில் உன்னையே தூய்மையாகவும் பரிசுத்தமாகவும் பாதுகாக்க நீ விரும்பினால், மேற்கண்ட இவைகளிலும் இன்னும் இது போன்ற அநேகக் காரியங்களிலும் நீ கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். ஒரு வேளை உலகம் உன்னைக் கண்டு சிரிக்கலாம்.

☹ பாவம் என்ற பலிபீடத்தில் அவ்வளவு சுலபமாக படைத்துவிடும் அளவுக்கு நித்தியம் ஒன்றும் அவ்வளவு மலிவானதல்ல. நீ போய் சேரப் போகும் உனது இலக்கு அவ்வளவு விலையேறப்பெற்றது.

☹ பரிசுத்தத்தைப் பரிகசிக்கும் நண்பர்களைக் கைகழுவி விட்டு பரிசுத்தத்தையும் தூய்மையையும் பொன்னாக வாஞ்சிப்பவர்களின் ஐக்கியத்தோடு ஒட்டிக்கொள் !

☹ இவைகளைச் செய்வதில் கண்ணும் கருத்துமாய் இருப்பாயானால், நீ விழுந்துபோகவே மாட்டாய் என்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சொல்கிறேன்.

கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக !

ஆமென்.

Chapter 03

பகுதி - 2

# SETTING SEXUAL BOUNDARIES !

- Sexual immorality is on the increase all over the world. Adultery is fast becoming the norm and men of God are also joining the club.
- Married women are not left out, many are having secret lovers and emotional affairs are becoming the order of the day.
- The rate at which immorality is increasing is alarming! It is spreading fast into every nook and cranny and children are also being initiated into the club.
- It's no news that 4, 5 years old kids now have sex with each other. Staying sexually pure these days is becoming a Herculean task.
- One of the reasons people fall flat into illicit sex is over confidence. The stupid belief that you can be free around the opposite sex and nothing would happen!
- A lot will happen! One of the ways you can stay sexually pure whether married or single these end time is to set strict boundaries.
- If you are too careless around the opposite sex, you will fall flat on your face! That is the truth. The ealier you believe this and work on it, the better. You can't be careless around the opposite sex and hope to stay sexually pure, set boundaries!
- There are some people who can't be your friends, raise the standard. Any body can call you names, that's their headache, you have your destiny to protect.

- As a rule, I don't make friends with liars, gossips and jealous women. They make life so complicated. If you believe in illicit sex, we can't be friends, period!
- Monitor your chats. Don't allow anybody send you flirty messages, no matter how innocent it sounds, warn them and if they refuse to stop, block them !
- Limit the hugs and touches. I don't hug men as a rule. If I must hug, my husband must be around and you should hug both of us.
- If your hugging anointing is only for women, I want none of it.
- Don't allow anybody call you pet names (except your close family members and same sex friends), it doesn't make any sense.
- Pet names turn the opposite on, if you don't know that, know it right now.
- Be sensitive to attractions. Don't be naive around the opposte sex, know when a man/ woman is sexually attracted to you and move back from that person.
- If they focus too much on your physique and body, they are sexually attracted to you, move back.
- Know when you are sexually attracted to someone and move back. It's perfectly normal to have chemistry for someone.
- Marrying the greatest man on earth or the most beautiful, virtous woman in the universe will not automatically stop you from being attracted to someone else. Know when the thought of another man/ woman get you excited and move back.
- Don't jump at new relationships. Give it time. Study the person, know what they stand for, see if your core values are compatible, if not, move back! (Consult mature Godly people before taking any decision)
- Work with your two hands and raise your standard. Men will respect and honour you for it.

- Leadership attracts all kinds of people. If you are a leader or you are gifted, talented or intelligent, the opposite sex will show more interest in you, be careful whom you allow to get close to you.

- Accepts gifts with care. Men don't joke with their time and money. If he spends so much time and money on you especially when you do not ask, he may one day ask for sex. Stop begging men for money.

- Work on your marriage. Fix the problem as soon as possible or else you get attracted to someone who gives you what you lack in your marriage, adultery is the result.

- Be prayerful, be watchful. Jesus says "watch and pray that ye may not fall into temptation..."

- Don't stay with the opposite sex in a dark or lonely room.

  Don't counsel the opposite sex on a bed in a lonely room.

- Avoid provocative dresses and pictures. Let your spouse advice you on what is okay for you.

- Mind the pictures you post on the social media, if it is getting unecessary opposite sex attention, delete it.

- Don't visit the opposite sex alone, it doesn't make sense.

- These and more are the things you need to do to stay sexually pure in this 21st century.

- People may laugh at you, it doesn't matter. They may call you a neurotic, psychotic, fanatic, over sensitive or paranoid, don't give a damn!

- Your destiny is too precious to waste on the altar of sin. Avoid friends who make fun of holiness and make friends with people who appreciate purity and holiness. You will not fall in Jesus name.

  God bless you, cheers!



# Chapter 04

## வானத்தில் பறக்கலாம் வா

ஊழியர் ஒருவர் தன் புத்தகத்தில் எழுதுகிறார்..

'கோயம்புத்தூரிலிருந்து வந்திருந்த அந்தக் கடிதம் என்னை உலுக்கி விட்டது.

எழுதியிருந்தது ஒரு வாலிபப்பெண். அப்போது தான் கல்லூரிப் படிப்பை முடித்திருந்தாள். தன் வாழ்க்கையில் இருளின் பிடியிலிருந்து, தான் மீட்கப்பட்டு வந்த நிகழ்ச்சியை சாட்சியாக எழுதியிருந்தாள். கடிதத்தில் காணப்பட்ட சில வரிகளைக் கொஞ்சம் திருத்தி கீழே தருகிறேன்..'

'...என் உடன் பயிலும் சகமாணவி மூலமாகத்தான் அவர்கள் எனக்கு அறிமுகமானார்கள். என் தோழியைப் பார்க்கக் கல்லூரி விடுதிக்கே வந்திருந்தார்கள்.. அவர்கள் மொத்தம் மூன்று பேர்..ஒரு நடுத்தர வயதுப்பெண்.. நகையில்லாமல் வெள்ளை நிறத்தில் நீண்ட கைவைத்த சட்டையணிந்து, வெள்ளைப் புடவையில் ஏறக்குறைய பக்தி நிறைந்த பெந்தேகோஸ்தே சகோதரிகளை நினைவுபடுத்துவது மாதிரி இருந்தாள்.

அவளுடன் இன்னும் இரண்டு ஆட்கள்.. அவர்களும் நடுத்தர வயதைத் தாண்டியவர்கள். மிகவும் கண்ணியவான்களாகத் தோன்றினார்கள்.

இவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்த தோழி முதலாவது அவர்களைத் தன்னுடைய உறவினர்கள் என்று தான் சொன்னாள். அவர்கள், அதிலும் அந்த நடுத்தர வயதுப்பெண் என்னிடத்தில் மிகவும் வாஞ்சையாகப் பேசினாள். பேச்சினூடே, தான் ஆவியுலகத்தோடு தொடர்புகொண்டு இயற்கைக்கு மேற்பட்ட பல அனுபவங்களைப் பெற்றிருப்பதாகவும், மரணம் இனிமையானது என்றும், மனிதக் கட்டுப்பாடுகள் தளர்ந்து அங்கே மனம் போல சஞ்சரிக்கலாம் என்றும் எனக்குப் புரியாத பல விஷயங்களைச் சொன்னாள்.

தான் கையோடு கொண்டு வந்திருந்த சில சிறிய புத்தகங்களையும் எனக்குத் தந்து வாசித்துப் பார்க்கும்படி சொன்னாள். எனக்கு அந்தப்பெண் சொன்னது எதுவும் புரியவில்லையாயினும், கேட்பதற்கு ஏனோ அதிக வாஞ்சையாய் இருந்தது. புதுமையாகவும் இருந்தது.

அவர்கள் போனதும் அவர்கள் சொன்ன காரியங்கள் பற்றி என் தோழியிடம் விசாரித்தேன். அவர்கள் மூவரும் இங்கே கோயம்புத்தூருக்கு அருகிலேயே ஒரு சிறு வீட்டை வாடகைக்கு எடுத்து தங்கியிருப்பதாகவும், ஆவி மண்டலத்தோடு தொடர்புகொண்டு பல புதிய அனுபவங்களைப் பெற்று வருவதாகவும், மரித்துப் போன ஆவிகளுடன் வெகு சாதாரணமாக அவர்கள் உரையாடுவதாகவும், தானே அதை நேரில் பார்த்ததாகவும் சொன்னாள். அவள் பேசப்பேச எனக்கு ஆர்வமாயிருந்தது..மேலும் அவளுடைய பேச்சிலிருந்து அவர்கள் இவளுக்கு உறவினர்கள் இல்லை என்பதும் தெரிந்தது.

‘இவர்களோடு உனக்கு என்ன சம்பந்தம் ?’ என்று நான் கேட்க, அவள், ‘நானும் இவர்களுடைய அமைப்பின் ஒரு அங்கத்தினர். நாங்கள் வாரம் ஒரு முறை இரவில் கூடி, மரித்துப்போன ஆவிகளை அழைத்து அவற்றுடன் பேசுவோம்..

அவைகள் எங்களுடன் மிகவும் நட்பாகப் பழகி, சில சமயம் தங்களுடன் எங்கள் ஆவிகளையும் அழைத்துச் செல்லும். வானத்தில் மிதக்கலாம்..

கடலில் நடக்கலாம்.. நட்சத்திர மண்டலங்களுக்குள் உலா வரலாம்..

இன்னும் நமக்குத் தெரியாத எத்தனையோ விஷயங்களை அந்த ஆவிகள் மூலமாகத் தெரிந்து கொள்ளலாம்..நீ ஒரு முறை பார்த்தால் தான் தெரியும்..

‘வாயேன்..ஒரு முறை வானத்தில் பறக்கலாம்..’ என்றாள்.

‘வானத்தில் பறப்பதா ?’ எனக்கு வியப்பாக இருந்தது.

என் குடும்பம் பாரம்பரியமான ஒரு கிறிஸ்தவக் குடும்பம். எனக்கு இந்த விஷயங்கள் கொஞ்சம் பயத்தைத் தந்தாலும், ஆர்வமே அதிகமாக இருந்தது. அதிலும் என் தோழி தன் கண்கள் விரிய விவரித்துச் சொன்ன பல புதிய தகவல்கள் என்னைப் பரவசப்படுத்தியது.

இரவு வெகு நேரம் தாண்டியும் விடுதியின் வளாகத்திலிருக்கும் புன்னை மரத்தடியில் உட்கார்ந்து இதைக் குறித்தே இருவரும் பேசிக் கொண்டிருந்தோம்.

அன்றிரவில் எனக்கு உறக்கமே பிடிக்கவில்லை. அந்த நடுத்தர வயது பெண்மணி தந்திருந்த புத்தகங்களைப் படித்தேன்.

ஏதோ ஒரு ஆர்வம் என்னை உந்தித் தள்ளியது. அருகில் உறங்கிக் கொண்டிருந்த என் தோழியை எழுப்பினேன்.

‘அடுத்த வாரம் எப்போ உங்கள் கூடுகை நடக்கும் ?’

அடுத்த சனிக்கிழமை என் தோழியுடன் அவளுடைய உறவினர் வீட்டுக்குப் போவதாக விடுதியில் அனுமதி பெற்றுப் புறப்பட்டோம்.

அந்த வீடு கொஞ்சம் மாடர்ன் அமைப்பில் இருந்தது. முன்புறம் போர்ட்டிகோ சகிதம் கொஞ்சம் பணக்காரத்தனம் தெரிந்தது.

நாங்கள் போவதற்கு முன்பாகவே அந்த வீட்டின் முகப்பில் நாலைந்து கார்கள் நின்று கொண்டிருந்தன. உள்ளே நிறைய பேர் கூடியிருந்தார்கள்.

நாங்கள் உள்ளே நுழைந்த போது அந்த ஆன்ட்டி மிகவும் வாஞ்சையுடன் என்னைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார்.

வீட்டினுள்ளே இன்னும் நிறைய பேர் இருந்தார்கள். குறிப்பாகக் கல்லூரியில் படிக்கும் பெண் பிள்ளைகள் நிறைய காணப்பட்டார்கள்.

அதே போல பையன்களும், நடுத்தர வயதான பெரிய மனிதத் தோரணையுடனான மனிதர்களும் இருந்தார்கள். எனக்கு கொஞ்சம் தடுமாற்றமாக இருந்தது.

நான் என் தோழியின் கையை அழுத்தி, ‘பயமாயிருக்கு..போயிடலாம்’ என்றேன்.

‘நீ இன்னும் அந்த உலகத்தைப் பார்க்காததினால் சொல்கிறாய்..கொஞ்சம் பொறுமையாய் இரு.. புதிய காரியங்கள் புலப்படும்..’ என்று ஏதேதோ சமாதானம் சொன்னாள்.

எனக்கு பயமாயிருந்தாலும் அதைவிட ஆர்வமே அதிகமாயிருந்தது. நடுவில் ஆன்ட்டியும் தலையை நீட்டி, 'என்ன பயப்படுகிறாயா ? பயப்படக்கூடியது இந்த மாய உலகத்துக்கு மாத்திரமே..இதில் தான் சூது, பொறாமை, வன்முறை எல்லாம் இருக்கிறது. ஆவி உலகம் இனிமையானது, புதுமையானது..' என்றாள்.

சரியக 10 மணிக்குத் தான் அந்த ஆராதனை ஆரம்பித்தது. கிறிஸ்தவக் கூட்டங்கள் போலத்தான் துவக்கத்தில் காணப்பட்டது.
வரிசையாக அவரவர் அந்த வாரத்தில் பெற்ற ஆவியுலக அனுபவங்களை சாட்சியாகச் சொன்னார்கள். கேட்பதற்கு ஒவ்வொன்றும் விநோதமாக இருந்தது.

ஒவ்வொருவரும் கடைசியில் 'சாத்தானுடைய மகிமை பெரியதென்று விளங்கிக் கொண்டேன்' என்பதாகச் சொன்னது தான் எனக்குச் சொரேல் என்றது.

பிறகு கொஞ்ச நேரம் பாடல் பாடினார்கள். அது புரியாத மொழியிலிருந்தது. அதன் பின்பு அந்த ஹாலின் உட்புறம் இருந்த ஒரு அறையைத் திறந்து கொண்டு, ஒரு மனிதர் வெளிப்பட்டார்.

நான் இது வரை அவரைப் பார்க்கவில்லை. மிகவும் கறுப்பான உடையணிந்திருந்தார். 'சாத்தான் வாழ்க..' என்று சொல்லித் தன் பேச்சை ஆரம்பித்தார். கடவுள் என்ற பெயரில் நடக்கும் மாய்மாலங்களைச் சொன்னார். கடவுள் என்பதே ஒரு மாய்மாலம் தான் என்றார். எனக்கு அவர் சொல்வது அநேகம் சமயங்களில் நியாயமாகப்பட்டது.

பின்னர் விளக்குகள் அணைக்கப்பட்டு மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டன. எல்லாரும் பரவசமடைந்தவர்கள் போலக் காணப்பட்டார்கள். பலர் மிதந்தார்கள்.

கிறிஸ்தவர்கள் இராப்போஜனம் ஆசரிப்பதைப் போல யாவரும் வரிசையாக பொன்னிறமாக இருந்த இனிப்பான பானத்தைப் பருகினார்கள். எனக்கும் என் தோழி வாங்கிக் கொடுத்தாள்.

அந்த ஆன்ட்டி வந்து என் தலையில் கையை வைத்து, 'சாத்தானை நீ நம்புகிறாயா?' என்றாள். தயக்கமாயிருந்தது. என்றாலும் தலையை மாத்திரம் ஆம் என்பதற்கு அடையாளமாக ஆட்டினேன்.

'அப்படியானால் நான் சொல்லித்தரும் இந்த மந்திரத்தை உச்சரித்துக் கொண்டேயிரு..' என்று ஒரு நாலு வரி மந்திரத்தை சொல்லிக் கொடுத்தாள்.

நான் சுவரின் மூலையில் அமர்ந்து அதை சொல்லிக் கொண்டே இருந்தேன். முதலில் தயக்கமாக.. அப்புறம் சரளமாக.. அப்புறம் வேகமாக.. அப்புறம் அப்புறம் தன்னிலை மறந்த வேகமாக..

எனக்குள் ஏதோ புதிய மாற்றங்கள் உண்டாவது மாதிரித் தெரிந்தது. சுற்றிலும் இருப்பவர்கள் வானத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். எல்லாருக்கும் மரிஞ்வானா பரிமாறினார்கள்.

சிலர் அதைப் புகைத்தார்கள். சிலர் அதை மென்றார்கள். நான், 'இன்னொரு முறை பார்க்கலாம்..' என்று தவிர்த்து விட்டேன். எல்லாரும் புதிய மொழியில் பரவசமானார்கள்.

நானும் கொஞ்சம் கொஞ்சமாய் கிறங்கி மயக்கமானேன். என் முன்பாக ஒரு ஆள்வந்து நின்றான். கறுப்பாக உயரமாக இருந்தான்.

'உன் சுண்டு விரலில் துளையிட்டு அந்த தீபத்தின் சுடரில் இரத்தத்தை வடியவிட்டு என்னுடன் உடன்படிக்கை செய்..உன்னதமான அனுபவம் பெறுவாய்..' என்றான்.

அவன் குரல் வசீகரமாயிருந்தது. அது நான் கீழ்ப்படியத்தக்கதாகவும் இருந்தது..நான் கனவிலேயே எழுந்து, அருகிலிருந்த ஒரு கனமான ஊசியை எடுத்து என் சுண்டுவிரலில் குத்தி, அதில் பொட்டாக வெளிப்பட்ட இரத்தத்தை அந்த தீபத்தின் சுடரில் வடியவிட்டேன்.

அவன் என்னருகில் வந்து, 'அன்பே, நான் உன்னுடன் பேசுவேன்.. எனக்காகக் காத்திரு..' என்றான். அவன் என்னுடன் இன்னும் பேச வேண்டும் என்று விரும்பினேன்.

ஆனால், யார் என்று கேட்பதற்குள் அவன் மறைந்து விட்டான்.

காலையிலே நான் உணர்வடைந்தபோது மணி நாலு இருக்கும்.
எல்லாரும் பஜனை மாதிரி பாடிக் கொண்டிருந்தார்கள். கொஞ்சப் பேர் உணர்வடையாமல் இன்னும் சிரித்துக் கொண்டிருந்தார்கள். நான் எழுந்தபோது, என் தோழி வந்து, 'வா..நீ கண்டதைச் சொல்..' என்றாள்.

கொஞ்சம் தடுமாற்றத்துடன் நான் பெற்றுக் கொண்ட கனவு மாதிரியான அந்த சம்பவத்தைச் சொன்னேன்.

சிலர் கை தட்டினார்கள். அந்த ஆன்ட்டி வந்து என் கையைப் பிடித்துக்கொண்டு, 'உனக்கு அதிரிஷ்டம் இருக்கிறது..நீ இன்னும் முயன்றால் உன்னை மனிதர்களுக்குள் உயரமான இடத்தில் கொண்டு வைப்பார்..

பெரிய மனிதர்கள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் எல்லாரும் உன் அருளாசிக்காகக் காத்திருப்பார்கள்..' என்று சொல்லி என் கைகளில் ஒரு பலகையைத் தந்து அதைப் பயன்படுத்தி எப்படி சாத்தானுடன் தொடர்பு கொள்வது என்று சொல்லிக் கொடுத்தாள்.

நான் வெளியே வந்த போது என் மனசு ரொம்ப பாரமாக இருந்தது. இது தவறு என்பது போல் என் மனம் என்னை வாதித்தது. இனி இங்கே வரக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டேன். என் தோழியுடன் வழியில் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை. விடுதிக்கு வந்ததும் அந்த ஆவிப்பலகையை மூலையில் போட்டு விட்டேன். காலையில் என் அம்மாவிடமிருந்து போன் வந்திருந்தது. என்னால் அவர்களுடன் சரளமாகப் பேச முடியவில்லை.

குற்றமனப்பான்மை என்னை அழுத்திக் கொண்டிருந்தது. 'கொஞ்சம் உடம்பு நல்லா இல்லம்மா..வர்ற வாரம் சனிக்கிழமை ஊருக்கு வர்றேன்..' என்று சொல்லி போனை வைத்தேன். அன்று வகுப்பிலும் கவனம் செல்லவில்லை. ஆனால் என் தோழி ஒன்றுமே நடவாதது போல சாதாரணமாக இருந்தாள்.

கான்ட்டீனில் என் நெற்றியைத் தொட்டுப் பார்த்து, 'என்னடி செய்யுது ' என்றாள். நான் பதிலேதும் சொல்லாமல் மதிய வகுப்பைப் புறக்கணித்துவிட்டு விடுதி அறையில் தங்கிக்கொண்டேன்.

மதியம் தான் அது நடந்தது..

என் மனதில் அந்தப் பலகை வந்து நின்றது. நேற்று நான் கேட்ட வசீகரக்குரல் என் காதுகளில் ஸ்பஷ்டமாக ஒலித்தது..

'வா..என்னுடன் பேசு..'

நான் பேசாமல் படுத்திருந்தேன். என் கண்களை மூடிக் கொண்டேன். ஒரே சீராக, மெல்லிசாக, வசீகரமாக அந்தக்குரல் என்னை அழைத்துக் கொண்டே இருந்தது.

'வா..என்னுடன் பேசு வா..'

நான் இயக்கப்படும் பொம்மை மாதிரி எழுந்து கட்டிலின் கீழே குனிந்து பலகையைத் தேடினேன். கையை நீட்டி அதை எடுத்தபோது தான் கவனித்தேன். கை சுண்டு விரலில் ஊசி முனையளவு காயமிருந்தது.

சிறு பொட்டுமாதிரி இரத்தம் உறைந்து கருஞ்சிவப்பாக மாறியிருந்தது. 'அப்படியானால் நேற்று நடந்தது கனவில்லையா ?' எனக்கு குழப்பமாயிருந்தது.

நேற்று நடந்ததை கனவென்று நான் நினைத்துக் கொண்டிருக்க, நிஜத்தில் என் விரலில் இரத்தம் உறைந்திருந்தது ஆச்சரியமாக இருந்தது. பலகையை எடுத்து நேற்று எனக்கு சொல்லித்தரப்பட்ட முறைகளைப் பின்பற்றி ஆவி உலகத்துடன் தொடர்பு கொள்ள ஆரம்பித்தேன். சுலபமாகத் தொடர்பு கிடைத்தது.

ஆவியுலகின் ஒரு பிரதான ஆவி பேசுவதாக என்னிடம் சொன்னது. அந்த ஆவி ஏராளமான புதிய தகவல்களை எனக்குத் தந்தது. நான் இன்னும் இதில் முன்னேறும்படி செய்ய வேண்டிய வழிமுறைகளைப் போதித்தது.

அதன்பிறகு ஒவ்வொரு முறையும் நான் அந்தப் பலகையின் உதவியோடு பேச முயற்சிக்கும் போதெல்லாம் எனக்கு உடனே தொடர்பு கிடைத்தது. அது சொன்ன பல காரியங்கள் பலித்தது.

அந்த வாரம் சனிக்கிழமை என் அம்மாவுக்கு சொன்னதை மறந்து விட்டு நான் அந்த இரவு ஆராதனை வீட்டை நோக்கிச் சென்றேன். அதைத் தொடர்ந்து நான் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை அந்தக் கூட்டத்திற்குப் போக ஆரம்பித்தேன். நாளாக நாளாக என் கண்களின் முன் பிரத்தியட்சமாக அந்தக் கறுப்பு நிற ஆள் வந்து நின்றான். விநோதமாகப் பேசினான். பலகை இல்லாமலேயே ஆவிகள் என்னுடன் இடைவிடாமல் பேச ஆரம்பித்தன.

என் அறையில் மாத்திரமல்ல, வகுப்பில், சிநேகிதிகளுடன் பேசிக் கொண்டிருக்கையில், படிக்கும்போது, கேன்ட்டீனில் என்று எல்லா இடத்திலும் என் காதுகளைக் கிழிக்கும்படி அந்த ஆவிகள் பேசிக் கொண்டே இருந்தன. சில சமயம் நாய்கள் அடித்துக் கொள்வது போல ஊளையுடன் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டன. அவை என்னுடன் பேசுவதைக் கணநேரம் கூட நிறுத்தவில்லை. பக்கத்திலிருப்பவர்கள் என்னை வித்தியாசமாகப் பார்க்க ஆரம்பித்தார்கள். வகுப்பில் அமர்ந்திருக்கையில் கனவில் கண்ட ஆள் கதவருகே வந்து நின்று என்னை வசீகரமாக அழைக்க ஆரம்பித்தான்.

நான் சாவி கொடுத்த பொம்மை மாதிரி வெளியே எழுந்து செல்ல ஆரம்பித்தேன். வகுப்பில் பிரச்சனை வந்தது. பிரின்ஸிபாலிடம் அழைத்துச் செல்லப்பட்டேன்.

அவர் கடிந்து கொண்ட போது விநோதமாக என் பல்லைக் கடித்து அவரை எச்சரித்திருக்கிறேன். ஒரு நாள் இரவில் என்னை விடுதியின் கடைக்கோடியில் இருக்கும் கிணற்று மேட்டில் கண்டுபிடித்து இழுத்து வந்திருக்கிறார்கள்.

அப்போது மணி இரவு ஒன்று !

இந்த சம்பவத்திற்குப் பிறகு என் சிநேகிதிகள் என்னை விட்டு விலக ஆரம்பித்தார்கள். எனக்கும் தனிமை தான் தேவைப்பட்டது. எனவே நான் இதைப் பொருட்படுத்தவில்லை.

சில நாட்களுக்குப்பின் ஆவிகளின் குரலை மாத்திரமல்ல, அவைகள் என்னைத் தொடுவதையும் உணர முடிந்தது. தொடக்கூடாத இடங்களில், ஆபாச உணர்வுடன் அவைகள் கூட்டமாய் என்னைத் தீண்ட ஆரம்பித்தன. அவை தீண்டத் தீண்ட நான் பாம்பு மாதிரி நெளிய ஆரம்பித்திருக்கிறேன். பிசாசின் கரங்களில் ஒரு கைப்பாவையாக ஆட்டிப் படைக்கப்பட்டிருந்திருக்கிறேன்...எதுவும் என் கவனத்தில் இல்லை...' என்று இந்தக் கடிதம் நீள்கிறது.

இந்தக் கடிதம் கிடைக்கப்பெற்ற ஊழியர் சொல்கிறார்..



'நான் இந்தக் கடிதத்தை 91ம் ஆண்டில் பெற்றேன். இந்தக் கடிதம் என் கையில் கிடைத்த போது அந்தப் பெண் விடுதலையாகி இருந்தாள்.

அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதென்று கல்லூரி நிர்வாகம் அவளை அனுப்பிவிட, பெற்றோர் மிகவும் வேதனையடைந்து, மனநிலை மருத்துவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். ஒன்றிலும் சுகம் கிடைக்காமல் சேலத்தில் நடந்த ஒரு தேவ ஊழியரின் கூட்டத்தில் கலந்து கொண்டு சுகம் பெற்றிருக்கிறாள். தொடர்ந்து சில நாட்கள் மறுபடியும் அந்த ஆவிகள் இவளைத் துரத்த ஆரம்பிக்க, ஊழியரின் ஆலோசனைப்படி ஒரு ஆவிக்குரிய சபையில் அடைக்கலமாகி பூரண விடுதலை அடைந்திருக்கிறாள்.

கோயம்புத்தூரில் அவள் போன அந்த ஆராதனை இன்னும் நடந்து கொண்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. ஆனால் இன்றைக்கு இந்த இரகசியமான ஆராதனைகள் இந்தியாவில் ஏராளமாகப் பெருகியிருக்கின்றன என்பது உண்மை.

இவ்விதமான சபைகளுக்கு சாத்தான் சபை என்று பெயர்.

இவற்றின் பிறப்பிடம் வழக்கம் போல அமெரிக்கா !'

இதின் பூர்வோத்திரத்தைப் பார்ப்போம்...

அமெரிக்காவில் ஒரு சாதாரண சபையில் போதகராகப் பணி செய்து கொண்டிருந்த மாகஸ் ஆன்ட்டன் சாண்டர்லாவே (Magus Anton Szandor Lavey) என்ற மனிதன்.

தன் போதகப் பணியில் சரியான அங்கீகாரம் கிடைக்காமல் பிரச்சனைகளை சந்திக்க நேரிட்டு, தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்திருந்த தினத்தில் சாத்தான் இவரைச் சந்தித்தான். முகமுமாய் சாத்தானிடம் தன்னை ஒப்புக்கொடுத்த ஆன்ட்டன் லாவே சாத்தானின் ஆலோசனைப்படி 1966 ம் ஆண்டு ஏப்ரல் 30 ம் தேதியன்று ஆரம்பித்த அமைப்புக்குத் தான் சாத்தான் சபை என்று பெயர்.

இந்த சபையினர் சாத்தானை தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். இந்த சபையின் ஆராதனை முறைகள் மிகவும் ஆபாசமானவைகள்.மனிதன் தன்னில் எதையும் கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடாது.

அவன் விடுதலையோடு, தான் நினைத்ததையெல்லாம் நிறைவேற்றிக் கொள்ளலாம். கடவுள் என்பவர் மனிதனைத் தனக்கு அடிமையாகப் பாவிக்க நினைக்கும் ஒரு ஏமாற்றுக்காரர்..எனவே நாம் அவரை எதிர்க்க வேண்டும் என்பதே இந்த சபையின் மூல உபதேசம். இந்த ஆராதனைகளில் லாகிரி வஸ்துக்களுக்கும், பாலியல் சமாச்சாரங்களுக்கும் பஞ்சமே இருப்பதில்லை. சபையின் உறுப்பினர்கள் தாங்கள் செய்து கொள்ளும் பொருத்தனைகளுக்காக குழந்தைகளைக் கடத்தி வந்து கொலை செய்து, சாத்தான் சபையில் வைக்கப்பட்டிருக்கும் பார்மலின் நிரம்பிய கண்ணாடித் தொட்டிகளில் மிதக்க விட்டுவிடுகிறார்கள்.

இந்த சபைக்கென்றே சாத்தானின் வேதம் என்ற பெயரில் ஒரு வேதத்தை வெளியிட்டிருக்கிறார்கள். பீட்டர் ஹெச் கில்மோர் என்ற இந்த சபையின் தலைமைப் போதகர் இதைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்.

இவர்கள் சபையில் சாத்தானைப் புகழ்ந்து பாடுவதற்கென்றே பாடல் தொகுப்பையும் வெளியிட்டிருக்கிறார்கள். **Satan takes a holiday** என்ற பெயரில் ஒரு இசை ஆல்பமும் வெளியாகியிருக்கிறது. இந்த சபையில் ஆபாசங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ள வகை கிடைப்பதால் பல பெரிய செல்வந்தர்கள் இந்த சபையில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

பல பெரிய தொழில் நிறுவனங்கள் தங்கள் லாபத்தில் ஏராளமான பணத்தை இந்தச் சபையின் வளர்ச்சிக்காகத் தருகின்றன. இந்த சபையினர் தான் இப்போது இந்தியாவிலும் வேரூன்ற ஆரம்பித்திருக்கின்றனர். தமிழ்நாட்டில் மாத்திரம் இன்றைக்கு 63 இடத்தில் இந்த சாத்தானின் சபை இயங்கிக் கொண்டிருக்கிறது.

இரகசிய ஆராதனைகள் வாரந்தோறும் நடக்கின்றன. இவர்களுடைய குறி முழுவதும் வாலிபர்கள் மற்றும் வாலிபப் பெண்கள் தான். வயதானவராக இருந்தால் பணக்காரராக இருக்க வேண்டும். சாமானியர்களுக்கு இடமில்லை.

பெங்களூரு பட்டணத்தில் மட்டும் இந்த சபைகள் வேகமாக வளர ஆரம்பித்திருக்கின்றன. கேரளாவிலும் இது பல இடங்களில் நடந்துவருகிறது.

சமீபத்தில் ஒரு போதகரின் மனைவி சென்னையில் இப்படிப்பட்ட சபையைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் கண்டு, விபரம் தெரியாமல் கிறிஸ்தவரோ என்று எண்ணி பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தார்.

இவர் சாப்பிட்டுக் கொண்டிருந்த பழத்தை அந்தப் பெண்ணுடன் பகிர்ந்து கொள்ள முயல, அவள் அதை வாங்க மறுத்து, 'நாங்கள் 21 நாட்கள் உபவாசம்.. சாப்பிடக்கூடாது..' என்று சொல்லியிருக்கிறாள்.

போதகரின் மனைவி அந்தப் பெண்ணிடம் உபவாசத்தின் காரணம் கேட்க, 'நான் சாத்தான் சபையைச் சார்ந்தவள்.. நாங்கள் உலகம் தழுவிய அளவில் மிகப்பெரிய உபவாசம் மேற்கொண்டிருக்கிறோம்.

எங்களுக்கு மூன்று வேண்டுதல்கள் இருக்கிறது. முதலாவது கிறிஸ்தவக் குடும்பங்களில், அதிலும் விசேஷமாக ஊழியர்களின் குடும்பங்களில் பிரிவினைகள் உண்டாக்க வேண்டும்.. இரண்டாவது கிறிஸ்தவ ஊழியர்கள் இரகசியப் பாவங்களில் இடறி விழ வேண்டும்.. மூன்றாவது, கிறிஸ்துவ ஊழியர்களுக்கு விபத்துக்கள் மூலம் மரணம் நடக்க வேண்டும். இதற்காகத் தான் அன்ன ஆகாரம் இல்லாமல் இந்த உபவாசம்..' என்பதாகத் திகிலூட்டியிருக்கிறாள்.

கண்ணுக்குத் தெரியாமல் தேசத்தில் ஊடுருவ ஆரம்பித்திருக்கும் இந்த சாத்தான் சபைகள் பெருகினால் சொல்ல முடியாத ஏராளமான பிரச்சனைகளை சமுதாயத்தில் நாம் சந்திக்க வேண்டியிருக்கும்.

நம்முடைய இளைஞர்கள் மற்றும் வாலிபப் பெண்களின் கதி ரொம்பவும் பயங்கரமாக மாறிவிடும். ஆங்காங்கே பாம்பு போல் நெளிய ஆரம்பித்து விடுவார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளைக் குறி வைத்துத் தாக்குவார்கள். இவைகள் பெருகாமல் தடுக்கப்பட என்ன செய்யலாம் ?

நாம் செய்வதற்கு ஒன்றே ஒன்று தான் இருக்கிறது..

ஜெபிக்கலாம் வாங்க !

( 'வானத்தில் பறக்கலாம் வா' என்ற இந்தப் பகுதி சகோ.வின்செண்ட் செல்வகுமார் அவர்களின் 'ஜெபிக்கலாம் வாங்க' புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது..)

# மொழிபெயர்ப்புகள்:



ஒரு கைதியின் டைரி
[ ஹெரலன் பாப்போவ் -
Tortured for his Faith ]



கேட்டகோம்ஸ்
இரத்தசாட்சிகள்
[ Martyrs of Catacombs ]



நீ எனக்கு தண்டாயுதமும்
அஸ்திராயுதமுமானவன்
[ Thou art My battle Axe -
Dr. Paul Enenche ]



கொலையுண்ணப்
போகிறவர்களை விடுவி !
[ He Came To Set The
Captives Free - Dr. Rebecca Brown ]

## புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**MRS. JENIFER ROMILTON**
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

# மொழிபெயர்ப்புகள்:




ரேவன்ஹில்
பேஜஸ்




என்றும் தணியும்
இந்த எழுப்புதல் தாகம்?
[ Rev. லியோனார்ட் ரேவன்ஹில் ]




உடைத்தெறி
[ Breakthrough -
Rudy Lack ]




எழுப்புதல்
எழுத்துக்கள்
[ Assorted Revival Notes ]

## புத்தகங்கள் கிடைக்குமிடம் :

**MRS. JENIFER ROMILTON**
246-B, Pocket-C, Mayur Vihar, Phase -2, Delhi-110091.
Cell: 9810646981 / 9990103010

# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:




என் தகப்பனே என் தகப்பனே!
இஸ்ரவேலுக்கு இரதமும்
குதிரை வீரருமானவரே!



என் மகனாகிய
அப்சலோமே!
என் மகனே! என் மகனே!




விக்கினத்தின்
மேல் விக்கினம்




சமயம் வாய்த்தாலும்
வாய்க்காவிட்டாலும்...




நீதிமான் மரிப்பதுபோல
நான் மரிப்பேனாக!




முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

# ஆசிரியரின் பிற நூல்கள்




உடைத்தெறி




இரத்தத்தின் சத்தம்



இரத்தத்தின் இரத்தம்




சிவந்த மண்



காத்துக்கொண்டால்
காத்துக் கொள்வேன்




எமர்ஜென்ஸி

# எழுப்புதல் ஏவுகணைகள்

எழுப்புதல் வீரர்களின் என்றும் அழியா எழுத்துக்கள்...





















# ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:










இனிமேல்
சம்பவிக்கப்போகிறது
என்ன ?

இந்து தேசம்
முதல்
இந்துத்துவா வரை...

மீண்டும்
ஒரு
மிஸா ?









மிஷன் 2024

குருதிப் பிரளயம்

முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்










முற்பிதாக்களின்
எழுப்புதல் ஏடுகள்

இதோ நாட்கள்
வருகிறது !

நாட்கள்
எண்ணப்படுகிறது

# ரிவைவா

**ஒரு எழுப்புதல் பயிற்சிப் பாசறை**

## வெளியீடுகள்




எழுப்புதலின் அடிப்படைகள், ஆரம்பப் பாடங்கள், ஆணி வேர்கள்.

ரிவைவல் 66 வேத புத்தகத்தின் 66 எழுப்புதல்கள்

ரிவைவல் 66 ( பகுதி 2 ) வேத புத்தகத்தின் 66 எழுப்புதல்கள்

எழுப்புதல் 300 சபை சரித்திரம் கண்ட 300 எழுப்புதல்கள்




எழுப்புதலும் மிஷனரி வரலாறும்

எழுப்புதலும் ( பகுதி 2 ) சுருக்கமான சபை சரித்திரமும்

எழுப்புதலும் வரப்போகும் நாட்களும் ( பகுதி 1 )

எழுப்புதலும் இன்றைய நாட்களும் ( பகுதி 2 )

### புத்தகங்கள் கிடைக்குமிடம்

**அடைபட்ட அக்கினி**

246-B, Pocket-C, Mayur Vihar, Phase-2, Delhi-110091
Cell: 98106 46981 / 99901 03010

## ஆசிரியரின் பிற நூல்களும் கட்டுரைகளும்:

- வருகைக்கு முன்னான வசந்தம்
- யோவேல் மறவேல்!
- ஹிட் லைக் ஹிட்லர்
- இதோ நீர் சொன்னபடியே சம்பவிக்கிறது !
- நீதிமான் மரிப்பதுபோல நான் மரிப்பேனாக !
- ஆத்துமப்பிணைப்பு (Soul Tie)
- விழுந்து நொறுங்கிய விக்ரம் லேண்டர்
- கறுப்பு பெந்தெகோஸ்தே
- ஆரம்பகால இரத்தசாட்சிகள்
- அந்த ஏழை மனிதனை நினைப்பாரில்லை..
- எழுதிவைத்தான் எசேக்கியா!
- எனக்கு உண்டானவைகளில் நான் பெற்றுக்கொள்ளாதது யாது?
- தேவனின் அசையாச் சொத்து
- திரை உலகே ! கலை உலகே !




**Pastor. Romilton**
Delhi
Mob: +91 98106 46981

LC
LIVING CREATION

கண்ணி

# கன்னி வெடிகள்



அநேக பிரசங்கங்கள்.. கணக்கற்ற தேவசெய்திகள்..புத்தகங்களுக்கோ குறைவில்லை.. வெளிப்பாடுகளும் தீர்க்கதரிசனங்களும் ஏராளம்.. இவைகள் எல்லாவற்றிற்குள்ளும் ஒரே ஒரு செய்தி மட்டும் மிஸ்ஸிங்!
அது ஒரு மிக மிக சீரியஸான விஷயம் ! அதிமுக்கியமான செய்தி ! வெகு ஜாக்கிரதையாகவும் துரிதமாகவும் டீல் பண்ணப்பட வேண்டிய காரியம் ! ஆழத்திலும் ஆழமான சத்தியம் !

தாங்கள் அறியாமலேயே, தாங்களே பின்னிக்கொண்டு அநேகர் சிக்கிக் கொண்டிருக்கும் ஒரு மாய வலை இது ! 'பாவம்' போலக் காணப்படும் பாவம் இது ! வேதம், 'வேண்டாம்' என்று வெறுத்து ஒதுக்கும் காரியங்களில் இதுவும் ஒன்று ! இது ஒரு இனிப்பான ஸ்லோ பாய்ஸன் ! மிக அருமையான வாசனை வீசும் மயக்க மருந்து ! முடிவில் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்தில் தள்ளும் மெர்ஸி கில்லர் ! ஆனால் சபைகளில் இது ஒரு கண்டுகொள்ளப்படாத உண்மை ! அறியப்படாத,காணப்படாத, தொடப்படாத ஒரு சப்ஜெக்ட் ! இது தன்னை வெளியில் காட்டிக் கொள்வதே இல்லை.. அவ்வளவு எளிதில் யாரையும் விட்டுவைப்பதுமில்லை.. இந்த மாயக் கயிற்றினால் கட்டப்பட்டு, தங்களையும், தங்கள் தேவனையும், மேன்மையான ஆவிக்குரிய ஜீவியத்தையும், மகிமையான ஊழியத்தையும் இழந்து நடுத்தெருவில் நிற்கும் மாமனிதர்கள் தான் எத்தனை எத்தனை !

இந்தக் கண்ணிகளில் சிக்கித் தவிக்கும் வாலிபர்களையும் பெரியவர்களையும் எப்படியாவது வெளியே கொண்டு வர இந்தச் செய்தி எந்த வகையிலாவது உதவாதோ என்பதே இப்புத்தகத்தின் நோக்கம்.

ஆகவே அன்பர்கள், 'இதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை' என்ற எண்ணத்தோடு அல்லாமல், 'இன்றைக்கு இதில் நான் எச்சரிக்கையோடு இல்லாவிட்டால் இது என்றைக்கானாலும் நம்மில் யாரோ ஒருவரையோ, அல்லது நம்மைச் சார்ந்தவர்களையோ, நமது பிள்ளைகளையோ அல்லது பின் சந்ததியையோ தனக்கு இரையாக்கி விடும் என்ற எச்சரிக்கையோடு வாசிக்கும்படியாகவும், மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும்படியாகவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு இந்த சத்தியங்களையும் திருவுளம்பற்றுகிறார் என்பதை மறவோமாக !

**அடைபட்ட அக்கினி**
246- B, Pocket - C, Mayur Vihar, Phase -2,
Delhi - 110091. **Mob : 98106 46981**

பாஸ்டர். **S.ரொமில்ட்டன்**